சன்மார்க்க தீபம்

முதற் புத்தகம் 393

ஆக்கியோர் :

C. V. நாராயண அய்யர், M. A., L. T.,
Assistant Professor of History, Presidency College, Madras.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
ஜார்ஜ் டவுன், சென்னை.

ரைட்] 1935 [விலை அணா 6

FOREWORD

I FEEL honoured by the request of the author to link my name with his in his work **SANMARGA DEEPAM** which is, as its name implies, a Lamp of Righteousness. The great danger to modern civilisation consists in the lower aims of life overwhelming and driving out the higher. Materialism, the worship of matter, is rampant everywhere. Mammon threatens to unseat God. Even in countries and communities paying homage to God, God is more present on the lips than in the hearts of men.

What, after all, is the purpose of human life? It is physical, mental, moral and spiritual perfection consummating itself in the realisation of God. It can be expressed in one word—*Culture.* Culture means sweetness; culture means light; culture means harmony; culture means happiness. There can be no real culture unless there is an intermingling of the ideal and the real.

The author has endeavoured in this work to introduce the youth of India into the ideal realm of ancient Indian culture and modern Western culture so that every boy and girl of India might be Indian and modern in a state of harmonious concord. The heroic temperament—

> "One equal temper of heroic hearts,
> Made weak by time and fate, but strong in will
> To strive, to seek, to find, and not to yield"—

is the prime need of India to-day. This work is sure to create such "equal temper of heroic hearts" and therefore deserves wide public appreciation and encouragement.

K. S. RAMASWAMI SASTRI,

District and Sessions Judge of Ramnad.

அறிவிப்பு

சன்மார்க்க தீபம்—முதற் புத்தகம் என்னும் பெயருடைய இச்சிறு நூல் இக்கால மாணவர்க்கு அகன்ற அறிவினையும் சிறந்த ஒழுக்கத்தினையும் அளித்து, அவர்தம் வாழ்க்கையைப் பயன் பெறச் செய்ய எழுதப்பட்டதாம். இதன்கண் காணப்படும் நம் நாட்டுப் பெருமக்களின் சீறிய வரலாறுகளும், அயல் நாட்டு அறிஞர்களின் பேரூக்கச் செயல்களைப் பற்றிய குறிப்புகளும், மனத்தை ஒருவழிப்படுத்தும் இனிய கட்டுரைகளும் படிப்போர் வாழ்க்கை உயர்வடைய இன்றியமையாத் தூண்டு கோலாக இருக்குமென்னுந் துணிபுடையேன்.

இச்சிறிய ஒரு நூலைப் படித்து அரியதொரு முன்னுரையளித்த என் நண்பர் திவான் பஹதூர் கே. எஸ். இராமசாமி சாஸ்திரியார் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி என்றும் உரியது.

அன்பன்,

சி. வி. நாராயண ஐயர்

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
1.	பிரார்த்தனை	1
2.	உங்கள் கடமை	3
3.	அன்பே ஆண்டவன்	6
4.	அன்பு மதமும் புத்த மகானும் ...	7
5.	அமுத மொழிகள்	9
6.	தூய உணவு	10
7.	மதம் என்பது யாது?	13
8.	மகிழ்ச்சியின் மாண்பு	16
9.	பத்திரிகை அளிக்கும் பயன் ...	18
10.	தெருக்கூட்டுகிறவன் தெரிவிப்பதென்ன?	21
11.	அருள் நிறைந்த அன்னையார் ...	23
12.	உயிரினும் உயர்ந்தது தாய் நாடே ...	25
13.	இராம கிருஷ்ணரும் சமரசமும் ...	27
14.	நோன்பும் அதன் பயனும் ...	29
15.	நானும் உங்களில் ஒருவன். ...	32
16.	சென்னைச் சேவா சாதனம் ...	35
17.	சொல் தவறாத சக்கரவர்த்தி ...	38
18.	'தேடு; உனக்குக் கிடைக்கும்.' ...	40
19.	சீவ காருண்யம்	44
20.	ஆனந்த நிலை	47
21.	கூட்டுறவு	50
22.	உண்மையுடைமை	53
23.	சுய நலம் கருதேல்.	56
24.	வீரம்	62
25.	பெண்களுக்கு உழைக்கும் பெரியார் ...	66
26.	கலங்கா உள்ளம்	72
27.	விளைப்பதே விளைவு	77

சன்மார்க்க தீபம்

முதற் புத்தகம்

1. பிரார்த்தனை

1. உடலை வளர்க்க உணவு வேண்டும்; அப்படியே உயிரை வளர்க்கப் பிரார்த்தனை வேண்டும்.

—காந்தியடிகள்

2. தூய மனத்தோடு செய்யப்படும் பிரார்த்தனை கடவுளால் வரவேற்கப்படும். —இரவீந்திர நாத தாகூர்

இவ்விசாலமான உலகத்திலுள்ள உயர்திணைப் பொருள்களையும் அஃறிணைப் பொருள்களையும் காண்கையில், இவற்றைப் படைத்த ஒப்பில்லாத பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்னும் உண்மையறிவு நமக்குத் தோன்றுகிறது. அவ்வொப்பில்லாத பொருளையே நாம் கடவுள் என்கின்றோம். அக்கடவுளை மனத் தூய்மையோடுசிந்தித்தலே பிரார்த்தனையாகும். பிரார்த்தனையால் விளையும் நன்மைகளை உலகிற் சிறந்த பெரியாராய் விளங்கும் காந்தியடிகள் பின் வருமாறு கூறுவதைக் கவனியுங்கள் :

"பிரார்த்தனையே என் வாழ்க்கையை உயர்த்தி வருகின்றது. அஃது இல்லாவிடின், வெகு காலத்துக்கு

முன்னமே எனக்குப் பித்துப் பிடித்திருக்கும். எனக்கு உண்டான மனக் கலக்கங்களும் வேறு பல துன்பங்களும் நீங்கச் சிறந்த கருவியாக இருந்தது பிரார்த்தனையே முதலில் யான் கடவுளிடத்திலும் பிரார்த்தனையிலும் நம்பிக்கை அற்றவனாய் இருந்தேன்; அதன் பின்பே, உடலை வளர்க்க உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமானது உயிரை வளர்க்கப் பிரார்த்தனையும் என்பதை உணர்ந்தேன். அந்நாள் முதல் இந்நாள் வரையில் நான் பிரார்த்தனை செய்து வருகின்றேன்.

"உலகத்தை உய்விக்கத் தோன்றிய பெரியார்களான புத்த மகானும், இயேசு நாதரும், முகமது நபியும் பிரார்த்தனை ஒன்றினாலேதான் ஞான உதயம் பெற்றனர் என்பதைச் சரித்திர மூலமாக நாம் அறிகின்றோம். இன்றும் கோடிக் கணக்கான மக்கள் பிரார்த்தனையால் தூய வாழ்வும் மன அமைதியும் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

"நான் பிரார்த்தனையைக் கைக்கொண்ட பின்பு என் மனச் சாந்தத்தை இழக்கவில்லை. பிரார்த்தனையில் இந்த முறையைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்னும் நியதி இல்லை. அவரவர் மத ஒழுக்கத்துக்கு ஏற்ற முறையில் தூய மனத்தோடு பிரார்த்தனை புரிதலே சிறந்தது. நாள்தோறும் நமது அன்பை வெளியிட்டுப் பிரார்த்தனை கூறுதல் நமது கடமை ஆகும். நீங்கள் நாள்தோறும் பிரார்த்தனை செய்வீர்களானால், சிறந்த ஒழுக்கத்தையும் நிறைந்த அறிவையும் தூய வாழ்வையும் பெறுவீர்கள்."

இவ்வாறு பெரியோர் பலரும் பிரார்த்தனையைக் குறித்துப் புகழ்ந்து கூறுகிறார்கள். ஆதலால், பிரார்த்தனை, மக்களாகப் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் அவசியமானதென்பது நன்கு விளங்குகின்றது அன்றோ?

---

2. உங்கள் கடமை

தாய் நாட்டு வீர மக்களே, வருங் காலத்தில் நமது நாட்டைப் பாதுகாப்பதற்குரிய மக்கள் நீங்களே. நாட்டை அழகுபடுத்தும் புலவர்களாகவும், வீரர்களாகவும், அறிஞர்களாகவும் விளங்க வேண்டுபவர்கள் நீங்களே. ஆதலால், இளமை முதற்கொண்டே உங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டுவது உங்கள் கடமையாகும்.

நீங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பு உடையவர்களாயிருத்தல் வேண்டும்; ஒரு நிமிட நேரமும் சோம்பி இருத்தல் ஆகாது; கலங்காத உள்ளத்தை உடையவர்களாயிருத்தல அவசியம். எதற்கும் அஞ்சாத பேராற்றல் வாய்ந்த இளஞ்சிங்கங்களாக நீங்கள் விளங்குதல் வேண்டும். உங்களிடம் உண்மை, பொறுமை, ஒழுக்கம் ஊக்கம் முதலான சிறந்த குணங்கள் உயர்ந்து காணப்படல் வேண்டும். 'எந்தக் காரியத்தையும் செய்து முடிப்போம்!' என்னும் தைரியம் உங்களுக்கு மிகுதியும் இருத்தல் வேண்டும்.

உங்கள் இளமைப் பருவம் துன்பம் நெருங்காத பருவம்; வீரமும் தைரியமும் விளங்கும் பருவம்;

அன்பும் அருளும் அரும்பும் பருவம்; சூடுள்ள உதிரம் உடலில் ஓடும் பருவம். இந்தப் பருவத்தில் நீங்கள் கொள்ளும் பழக்க வழக்கங்களே, உங்கள் ஆயுள் முழுவதும் நீடித்திருக்கும். ஆதலால், இளமைப் பருவத்தையுடைய நீங்கள் நற்குண நற்செயல்களை உடையவர்களாக இருந்தால், உங்கள் பிற்கால வாழ்க்கை மிக உயர்ந்த நிலையில் இருக்கும்.

'முடியாது,' என்ற சொல் உங்கள் அகராதியில் இருத்தல் கூடாது. 'முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை' என்று நெப்போலியன் கூறிய வீர வார்த்தை எப்போதும் உங்கள் நினைவை விட்டு நீங்கலாகாது. எதையும் செய்யக் கூடிய வலிமையை நீங்கள் பெருக்கிக் கொள்ள வேண்டும். அந்நிலையிலேதான் உங்களுக்கு அச்சம் என்பது தோன்றாது.

உங்கள் உடலையும் அறிவையும் வளர்த்துக்கொள்ளுவதற்குரிய காலமும் இளமைப்பருவமே யாகும். ஆதலால், உடலை வளர்த்தற்குரிய உடற்பயிற்சியை நீங்கள் தினந்தோறும் செய்தல் வேண்டும்; ஒவ்வொரு நாளும் நன்றாகக் கல்வி கற்க வேண்டும்; நம் தாய் மொழியாகிய தமிழைப் பிழையறக் கற்றல் அவசியம். நம் முன்னோரின் சரித்திரங்களையும், பிற நாட்டுப் பெரியோர், வீரமக்கள், அரசர் முதலியவர்கள் வரலாறுகளையும் படித்தறிதல் வேண்டும்.

நம் நாடு முன்னேற்றம் அடைதற்குரிய சாதனங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்; கைத்தொழில், விவசாயம், வாணிபம் இவற்றைப் பற்றிக் கூறும் நூல்களை மிகுதியும் படித்து, மேல் நாட்டு முறைகளையும்

நம் நாட்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பெரியவர்களான பின் இம்மூன்றையும் உயர்த்தக் கூடிய முறைகளைக் கையாள வேண்டும். நமது நாட்டு முன்னேற்றத்திலேயே நீங்கள் கண்ணும் கருத்துமா-யிருத்தல் வேண்டும்.

உங்கள் நாடு, உங்கள் மொழி, உங்கள் நாட்டு மக்-கள், உங்கள் தொழில் ஆகிய இவற்றை நீங்கள் என்றும் மறக்கலாகாது. நாட்டுப் பற்றும் உழைப்பும் மிகுதியாக உடைய மக்களாக நீங்கள் விளங்குதல் வேண்டும். இறைவன் உங்களுக்கு இன்னருள் புரிவானாக.

ஊக்க முடையோமென் றூடுதம்பீ!
உண்மைபேசி வாழ்வோமென் றூடுதம்பீ!
ஏக்கம் தவிர்ப்போமென் றூடுதம்பீ!
எல்லோரும் வாழ்வோமென் றூடுதம்பீ! 1

ஏழைகள்நம் சோதரரென் றூடுதம்பீ!
எல்லோரும் இந்தியரென் றூடுதம்பீ!
கோழைத் தனமொழியென் றூடுதம்பீ!
கோபம் ஒழிப்போமென் றூடுதம்பீ! 2

உழைத்திங் குயர்வோமென் றூடுதம்பீ!
உழவை உயர்த்துவோமென் றூடுதம்பீ!
பழையன பேசோமென் றூடுதம்பீ!
பகர்வன செய்வோமென் றூடுதம்பீ! 3

—சி. வி. நாராயண ஐயர்

3. அன்பே ஆண்டவன்

1. எவன் மனத்தில் அன்பு குடிகொண்டு இருக்கிறதோ, அவன் மனத்திலேதான் ஆண்டவன் குடியிருக்கிறான்.

—குரு நானக்

2. அன்பு ஒன்றே ஆண்டவனை அடையும்படி செய்யும்.

—இரவீந்திர நாத தாகூர்

அன்பு என்பது மக்கள் மனத்தில் ஊறும் இன்ப நெகிழ்ச்சியாகும். உயர்ந்தோர், தாழ்ந்தோர், அஃறிணைப் பொருள்கள் என்னும் வேறுபாடு இல்லாமல், எவ்வுயிரினிடத்தும் காட்டும் அன்பே உண்மையன்பு எனப்படும். அன்புநிலை ஒன்றே ஆண்டவனைக் காட்டும். அதுவே வாழ்வைத் தூய்மையாக்கும் அருமருந்து. அன்பைக் குறித்து டீக்கன் என்னும் ஆங்கில அம்மையார் வெகு அழகாகக் கூறி உள்ளதைக் கவனியுங்கள்:

"அன்பே தெய்வம். உண்மை அன்பு எங்குக் குடிகொண்டு இருக்கிறதோ, அங்கே தெய்வமும் இருக்கிறது. அன்பு தெய்வவடிவானது. என் கடவுள் அன்பே ஆகும். நான் யாவரிடத்தும் அன்பாய் இருத்தலையே எனது கடமையாகக் கொண்டிருக்கின்றேன். என் அன்பு மயமான தெய்வம், எங்கும் நிறைந்து இருந்து, உலகத்து உயிர்களை நேசித்து, எல்லையற்ற அன்பின் பெருக்கால் காத்து வருகின்றதென்பதே எனது நம்பிக்கையாகும்.

" அன்பை அடிப்படையாகக் கொண்டவருக்குத் தியாகம் பெரியதன்று. அவர்கள் பிறர் பொருட்டே

வாழ விரும்புகிறார்கள். அவர்கள் ஆண்களானாலும் பெண்களானாலும், உலக மக்கள் போற்றுவதற்குரிய நிலையை அடைகின்றார்கள். அப்பெரியார்களின் தியாகத்தால் உலக மக்கள் நன்மை அடைந்து இருக்கிறார்கள். தமக்கென வாழாத அந்தப் பெருமக்களால் உலகம் பிழைக்கின்றது.

"உலகில் அன்பும் தியாகமும் ஓங்கி வளர்ந்து, எல்லாமக்களும் தங்களைப்போலப் பிறரையும் நேசிக்கத் தொடங்கினால், இவ்வுலகமே பூலோக சுவர்க்கமாக விளங்கும் என்பதில் ஐயம் யாது? அத்தகைய பூலோக சுவர்க்கமாக இவ்வுலகத்தை மாறச் செய்யும் அன்பும் தியாகமுமேஒவ்வொருவரிடத்திலும் விளங்கவேண்டும்."

---

4. அன்பு மதமும் புத்த மகானும்

1. அன்பு ஒன்றே ஆண்டவனைக் காட்டும்.

—இயேசு நாதர்

2. நீங்கள் அன்புகனிந்த மனமுடையவர்களாய்இருங்கள்.

—முகமது நபி

அன்பையே ஆஸ்தியாகக் கொண்ட சித்தார்த்தர், உலகத் துன்பங்களை ஒழிக்க ஒரு வழி தேடத் தம் அரசையும் மனைவி மக்களையும் சுக போகங்களையும் விட்டுக் காட்டை அடைந்தார்; அங்கு நீண்ட காலம் பிரார்த்தனை செய்து, முடிவில் ஞான உதயம் பெற்றுப் புத்த மகான் ஆனார். அவர் போதித்த மதத்துக்குப் புத்த மதம் அல்லது அன்பு மதம் என்பது பெயர்.

'எவ்வுயிர்க்கும் அன்பு செய்யுங்கள்,' என்பதே அவரது திருவாக்காகும்.

அவர் ஒருநாள் மலைப்பக்கத்தில் நின்று எதையோ பார்த்துக்கொண்டு இருந்தார். சிறிது நேரத்திற்குள் அவ்வழியே பல இடையர் ஆயிரம் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தனர். புத்தர் அவர்களை நோக்கி, "நீங்கள் இந்த ஆடுகளை எங்கு ஓட்டிக்கொண்டு போகின்றீர்கள்?" என்று கேட்டார்.

இடையர், "ஐயா, நாங்கள் இவற்றைப் பிம்பிசாரன் நடத்தும் யாகத்திற்கு ஓட்டிக்கொண்டு செல்கிறோம். இவை அந்த யாகத்தில் வெட்டப்படும்," என்றனர்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட புத்தர் மனம் நெருப்பிற்பட்ட புழுப்போலத் துடித்தது. அவர் கண்களிலிருந்து பலபல என்று நீர் வடிந்தது. அன்பே உருக்கொண்டு வந்த அப்பெரியார், "அந்தோ! இத்தனை உயிர்களும் வீணாகக் கொல்லப்படுமே! இவற்றை எவ்விதத்திலாவது காப்பாற்றவேண்டும்," என்று தமக்குள் கூறி, இடையர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

வழியில் சிறிய ஆட்டுக்குட்டி ஒன்று நடக்க முடியாமல் தவித்தது. அதைக் கண்ட புத்தர் மனம் கரைந்தது. அவர் கண்களில் நீர் வடிய, அந்தச் சிறிய ஆட்டுக் குட்டியை எடுத்துத் தம் அக்குளில் வைத்துக்கொண்டு சென்றார். முடிவில் அவர் யாக சாலையை அடைந்து பிம்பிசாரனைக் கண்டார்.

புத்தர் பிம்பிசாரனை நோக்கி, "அரசரே, நீர் ஒரு யாகம் செய்வதாகக் கேள்விப்பட்டேன். இந்த வாயில்லாத உயிர்களைக் கொல்லாமல் யாகம் செய்யலாகாதோ? அங்ஙனம் செய்யப்படும் யாகம் கடவுளுக்கு விருப்பமாயிராதோ? ஓர் உயிரைக் கொல்ல நமக்கு உரிமை உண்டோ? கொன்ற ஒன்றுக்கு மீண்டும் உயிர்கொடுக்க நம்மால் இயலுமா? பிம்பிசாரரே, நீர் அறிவுள்ளவராதலால், நான் கூறியவற்றை நியாயமென ஒப்புக்கொள்வீர் என்று நம்புகிறேன்," என்றார்.

புத்த மகான் கூறிய ஒவ்வொரு சொல்லும் அரசன் மனத்தைக் கலக்கியது; அவனிடம் குடியிருந்த அறியாமை என்னும் பெருங்கட்டியைக் கரைத்தது. அறியாமை மறையவே, அரசன் அறிவுடையவன் ஆனான். புத்த மகான் கூறியவை நியாயமானவை என அவன் உள்ளத்தில் இருந்து ஓர் எண்ணம் உதித்தது. உடனே அவன் ஆயிரம் ஆடுகளையும் இடையர்க்கே கொடுத்துவிட்டு, உயிர்ப் பலி இல்லாமலே யாகத்தை முடித்தான்.

---

5. அமுத மொழிகள்

1. நல்ல ஒழுக்கமே உயர்ந்த ஆபரணம்.

2. மன நேர்மையே இன்பம்; மனக் கோணலே துன்பம்.

3. முயற்சி எவ்வளவோ, பயனும் அவ்வளவே. காலம் என்பது, யோகம் என்பது ஒன்றில்லை.

4. பாடு பட்டால்தான் ஒருவன் பயன் பெறக் கூடும்.

5. உயர்ந்த எண்ணங்கள் ஒருவனை உயர்ந்தவனாக்கும்; தாழ்ந்த எண்ணங்கள் ஒருவனைத் தாழ்ந்தவனாக்கும்.

6. நீங்கள் எதிலும் உங்கள் மனத்தை அரைகுறையாகச் செலுத்தாதீர்கள்.

7. சுத்தமாய் இருத்தல் பக்தியாய் இருத்தலுக்கு அடுத்த படியாகும்.

8. மகிழ்ச்சியே நம் உடல் நலத்துக்கு முக்கிய காரணம்.

9. காலத்தின் விலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது, உன்னை நீயே கொலை செய்துகொள்ளுவதைப் போலாம். —ஜேம்ஸ் ஆலன்

10. 'இயலாது' என்பது என் அகராதியில் இல்லை. —நெப்போலியன்

11. எதையும் யோசித்துச் செய்பவன் நல்ல நிலையை அடைவான். —ஹென்றி போர்ட்

12. முயற்சி உடையார் உயர்ச்சி பெறுவார். —இராம்சே மாக்டோனல்ட்

6. தூய உணவு

1. ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை இனிதே. —விளம்பி நாகனார்

2. மனிதன் தன்னைப்போன்ற உயிர்களின் மாமிசத்தைத் தின்று உடலை வளர்ப்பது அடாது. —காந்தியடிகள்

உடல் நலத்தைக் காப்பதற்கு மரக்கறி உணவே பெரிதும் வேண்டத் தகுந்தது. எக்காரணத்தைக் கொண்டும் இறைச்சியை உண்ணுதல் பெருந்தவறு. பலவகை உணவுப் பொருள்களையும் சோதித்துப் பார்க்கையில், பாலும் கீரையுமே சிறந்த உணவுப் பொருள்களாகக் காணப்படுகின்றன. மற்ற உணவுப் பொருள்களில் உள்ள குண பேதங்களையும் சமனுக்கும் திறமை இவற்றிற்கு அமைந்திருக்கிறது. இந்த இரண்டைத் தவிர, வேறு பொருள்களுக்கு இக் குணமே இல்லை. ஆதலால், சிறந்த வைத்திய நிபுணர்கள் பாலும் கீரையுமே சிறந்தவை எனக் கூறுகின்றார்கள்.

இரண்டாவதாகப் பழ வகைகள், கோதுமை முதலிய தானிய வகைகள், கிழங்கு வகைகள் இவற்றை உண்ணுதல் மிகச் சிறந்தது. கோதுமையில் சிறந்த உணவுச் சத்து இருக்கின்றது. இதைக் கோதுமை உணவு கொள்ளும் பாஞ்சால நாட்டு மக்களின் உடல் உரத்தினால் நாம் கண்டுகொள்ளலாம். நாம் உண்ணும் அரிசி உணவில் ஒரு வித விசேஷச் சத்தும் இல்லை. முதலில் அரிசியை எவ்வளவுக்கெவ்வளவு குற்றித் தவிட்டைப் போக்குகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் உணவுச் சத்தும் குறைந்து போகிறது. அன்றியும், சாதம் வெந்த பிறகு, அதிலுள்ள கஞ்சியை வடித்துவிடுவதால், அரிசியில் மீதி இருந்த உணவுச் சத்தும் நீங்கிவிடுகிறது. ஆதலால், அரிசியை அதிகமாகக் குற்றிச் சத்தைப் பாழாக்காமல், பதமாகக் குற்றி உபயோகித்தல் வேண்டும்.

காய்கறி, தானிய வகைகள் முதலான இயற்கை-யாகக் கிடைக்கும் இவ்வுணவுப் பொருள்களை விட்டு, உயிர்களை வதைத்து உண்பது கொடிய செய்கையன்றோ? மாமிசம் நீங்க உண்ணும் உணவே தூய உணவு எனப்படும். அத்தூய உணவைப் பற்றிக் காந்தியடிகள் பின் வருமாறு கூறியுள்ளார்கள் :

"தூய உணவே மனித வாழ்க்கைக்கு இன்றி அமையாதது. தூய ஒழுக்கத்திற்கு ஊன்றுகோல் அதுவேயாகும்.

"மரக்கறி உண்போரும் சில விதிகளைப் பின்பற்ற வேண்டும்: அவர்கள் வயிறு வெடிக்கும்படி உண்ணலாகாது. அப்படிப்பட்டவர் ஒரு நாளும் சுகத்துடன் வாழ இயலாது. சரீரப் பாதுகாப்புக்கான உணவையே கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டுகிறேன். ஆகவே, நல்ல உடல் நலம் ஒருவனுக்குத் தேவையானால், அவன் ஒரு நாளில் பல முறை உண்ணும் வழக்கத்தையும், அளவுக்கு அதிகமாக வயிற்றை நிரப்புவதையும் நிறுத்த வேண்டும். உணவு குறைவாகக் கொண்டாலும் கொள்ளலாமே அன்றி, அதிகமாகக் கொள்ளலாகாது. ஆதலால், நான் என்னிடம் வரும் விருந்தினரை அதிகமாக உண்ணும்படி வற்புறுத்துவதில்லை.

"உடல் வளப்பத்தைவிட மனத் தூய்மையே ஒருவனுக்கு மிகவும் அவசியமானது. மாமிச உணவை உண்டு வாழும் மிருகமாக மனிதன் இருக்க முடியாது. காய், கனி, கிழங்கு, தானியங்கள் இவற்றை உண்டே மனிதன் வாழ வேண்டும். 'மாட்டுச் சூப்போ, மாமி-

சமோ சாப்பிடாவிட்டால், நீ மாண்டு போவாய்,' என்று வைத்தியர் ஒரு சமயம் கூறுவாரானால், நான் மரணத்தையாவது அன்புடன் ஏற்றுக் கொள்வேனே அல்லாமல், அவ்வித உணவை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆகவே, மக்கள் சுகாதாரத்தை மட்டும் கவனித்துக்கொண்டு நின்றுவிடாமல், அன்பு தழுவிய நல்லொழுக்கத்தையும், பின்பற்றுமாறு வேண்டுகின்றேன்."

---

7. மதம் என்பது யாது?

1. அன்பை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்கமே மதம் எனப்படும். —இராமகிருஷ்ணர்
2. அன்பு நெறியால் உலகம் பிழைக்க வழி கூறும் முறையே மதம் எனப்படும். —விவேகானந்தர்

சரித்திரத்தில் கண்ட அளவில் உலகில் தோன்றிய மதங்கள் எல்லாம் அன்பையே அடிப்படையாகக் கொண்டவை. உள்ளுணர்ச்சியின் நல்ல நெகிழ்ச்சியே அன்பு என்பது. உயிர் என்னும் மரத்துக்கு ஆணி வேர் அன்பே ஆகும்; உயிர்களை நேசிப்பதே உன் உயிரை வளர்ப்பதாகும்' என்னும் இயேசு நாதரின் அறவுரை பொன்னேபோலப் போற்றத் தகுந்தது. 'பிறரை வெறுக்காமல் யாவரிடமும் அன்பு செலுத்துவோன், கடவுளுக்கு மிக நெருங்கியவனாகிறான்,' என்ற கண்ணன் கனிவுரையும் கருத்தில் இருத்தத் தக்கது. இவ்விரண்டு பொன் மொழிகளாலும், 'அன்பை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமே மதம்; அன்புடை-

யான் மதமுடையான்; அன்பு மதமே உண்மை மதம்; அது சன்மார்க்கம்,' என்பன தெளிவாகத் தெரிகின்றன அல்லவா?

இப்படிப்பட்ட அன்பு மதத்தை அறிவுறுத்தி மறைந்தவர்களே புத்த மகான், இயேசு நாதர், முகமது நபி முதலானவர்கள். அவர்கள் தங்கள் முடிவான எண்ணங்களை அடையும் பொருட்டு எவ்வளவோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு தங்கள் எண்ணங்கள் பூர்த்தியாவதற்கு ஏற்பட்ட துன்பங்கள் பலவற்றைச் சிறிதும் மனம் தளராமல் பொறுத்துக்கொண்டு பாடு பட்ட பெருமக்களே மக்கள் வணங்கிப் போற்றுவதற்கு உரியவர்கள். அவர்கள் வரலாறுகளை உள்ளவாறு உணர்ந்தால், உண்மை மதம் எது என்பது எளிதில் விளங்கும்.

சித்தார்த்தர் அன்பு மதத்தைப் போதிப்பதற்கு விரும்பி, தம் அரசையும், பெற்றோரையும், மனைவி மக்களையும், எல்லாச் சுக போகங்களையும் முற்றும் துறந்து காடு புகுந்து, ஞான உதயம் பெற்றுப் புத்த மகான் ஆனார். தம் நலம் இல்லாத இப்பரம புருஷரின் தியாகத்தால் உலக மக்கள் மிக்க முன்னேற்ற ஒழுக்கம் பெற்றார்கள். இவர் அரிய உபதேசங்களினால், 'அன்பே சிறந்தது ; அதுவே மதம்; அதுவே உயிர் நாடி,' என்பன உள்ளங்கை நெல்லிக் கனிபோல ஐயமின்றி விளங்கும்.

அன்பு மதத்தைப் பரப்பத் தோன்றிய மற்றொரு பெரியார் இயேசு நாதர் ஆவர். அவருடைய போதனைகளின் சத்தெல்லாம் அன்பே ஆகும். 'தன்னைக்

கொல்ல வரும் பகைவனையும் அன்பினால் வெல்ல வேண்டும்,' என்னும் அரிய முறையைக் கற்பித்தவர் இயேசு நாதரே ஆவர். அவர் பல துன்பங்களுக்கு ஆளானார்; அறிவீனத்தால் துன்புறும் எளிய மக்கள் பிழைக்க அன்பு மதத்தைப் பரப்பிக் கொடியரால் சிலுவையில் அறையுண்டார் என்றால், அவர் பெருமையை என்னவென்பது!

முகமது நபி, அக்கால அரேபியரின் பழக்க வழக்கங்களில் வெறுப்புற்று, மக்களின் கொடுஞ்செயல்கள் தீய ஒழுக்கம் முதலியவைகளை அன்பினாலே தான் அகற்றக் கூடும் என்பதை நன்குணர்ந்து, அன்பு மதமாகிய இஸ்லாமிய மதத்தைப் பரப்பத் துணிந்தார். அவருக்கு அம்முயற்சியில் நேர்ந்த துன்பங்கள் பல. பலர் அவரைக் கொல்ல முயன்றனர். அவர்களையும் நபி நாயகம் அன்புடன் வரவேற்றார். 'கொடிய பகைவனையும், கொடிய விலங்கையும் அன்புடன் நடத்து. நீ அன்பினால் கொடிய பகைவனையும் விலங்கையும் வசப்படுத்தலாம். அன்புக்குக் கட்டுப்படாத உயிர் இல்லை,' என்பதே நபி நாயகத்தின் அருள் வாக்காகும்.

ஆகவே, அன்புள்ள பிள்ளைகளே, மதம் என்பது அன்பே; அவ்வன்பு மதத்தைப் பரப்புவதே சிறந்த கடமை; அன்பு நெறியே பின் பற்றத் தக்கது: சைவ, வைணவ மதங்களும் இவ்வன்பு நெறியினையே போதிக்கின்றன. நீங்கள் இவற்றை அறிந்து வாழுங்கள்.

8. மகிழ்ச்சியின் மாண்பு

1. நாம் சிரிக்காத நாள் வீண் நாளே. —சாம்நுபா

2. எனக்கு உண்டான நோயின் துன்பங்களை எல்லாம் நான் மகிழ்ச்சியினாலேயே கடந்துவிட்டேன்—டர்ன்ஸ்

சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் அறிகுறியாகும். சிரிக்கும் தொழில் மற்றத் தொழில்களைவிட ஒரு மனிதனுக்கு மிகச் சிறந்தது. இதனால் நன்மை உண்டென்றே கடவுள் இதை நமக்கு அளித்திருக்கிறார். சிறந்த வைத்திய நிபுணர் பலர் சிரிப்பின் சிறப்பைப் பின் வருமாறு கூறுகின்றனர்:

"சிரிப்பு உடலுக்குள் இருக்கும் உறுப்புகளுக்கு அசைவு கொடுக்கவும், அதே வேளையில் மனிதனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவும் அமைந்துள்ள இயற்கைச் சாதனமாகும். இதன் தொழில் நுரை ஈரலில் தொடங்கி, அங்கிருந்து முறையே கல்லீரல், இரைப்பை முதலிய உள் உறுப்புகளை விரைவாய் அசையுமாறு செய்கின்றது. அதனால், இருதயம் வேகமாய்த் துடிக்கின்றது. ஆதலால், இரத்த ஓட்டமும் காற்று உட்கொள்ளுதலும் வெளி விடுதலும் அதிகரித்து, உடலுக்கு வெப்பத்தை அளித்து, அதற்கு ஒரு வித ஒளியைத் தருகின்றது. சிரிப்பினால் கண்கள் பிரகாசம் பெறுகின்றன; மார்பு அகன்று, விரிகின்றது. இவற்றால் அழகிய உடல் நிலை அமைகின்றது. சுருங்கக் கூறினால், சிரிப்பு, உடலின் எல்லா உறுப்புகளின் தொழில்களையும் ஒரே காலத்தில் நிகழ்த்தி, உடல் நிலையை ஒழுங்குபடுத்துகின்றது என்று கூறலாம்.

"சிறப்பாக வைத்திய நிபுணர் பலர் மலர்ந்த முகத்-தோடு இருப்பதைக் காணலாம். மாத்திரைகளைவிட அவர்களே சிறந்த மருந்து போன்றவர்கள். நோயாளி-களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று, அவர்களுக்கு நல்லறிவு போதிக்கும் வைத்திய நிபுணர்களையே மக்கள் விரும்புகிறார்கள். சிலர் சிறந்த மருந்துகளை வைத்-திருந்தாலும், அவர்களிடம் மக்கள் விரும்பிச் செல்வ-தில்லை. ஏன்? மக்கள் சிரிப்புத் தவழும் முகத்தை விரும்புகிறார்களே அல்லாமல், கடுகடுப்பான முகத்தை விரும்பவில்லை."

புன்சிரிப்பு உடல் நலத்துக்கு ஏற்ற துணையாகும். இதுவே நமக்குச் சிறந்த மருந்தாகும். எமர்சன் என்னும் ஆங்கில அறிஞர் எப்போதும் சிரித்த முகத்-துடனே விளங்குவாராம். அவர் முகத் தோற்றத்தைக் கண்டதும், அவர் நண்பர்கள் தங்கள் கவலைகளை விட்-டுக் களிப்புக் கொள்வார்களாம். 'ஒரு மனிதன் புன்-சிரிப்புக் காட்டும் போதும், சிரிக்கும் போதும் அவன் ஆயுள் வளர்ச்சி அடைகிறது,' என்று ஜெர்மன் வைத்-திய நிபுணர் ஒருவர் கூறுகின்றார். நம் வாழ்க்கையி-லும் துக்கத்தைவிட மகிழ்ச்சியையே நாம் பெரிதும் விரும்புகிறோம். நாம் எந்நிலை அடைந்தாலும், இயன்ற வரையில் மகிழ்ச்சியோடு இருத்தல் மிக்க நன்மை பயக்கும்.

ஆங்கில ஆசிரியரான ஸர். வால்டர் ஸ்காட் என்-னும் அறிஞர், எப்போதும் அன்று மலர்ந்த தாமரை மலர்போல மலர்ந்த முகத்துடன் காணப்படுவார். அவர் தம்மைப் போலவே பிறரையும் மலர்ந்த முகத்துடன்

இருக்கத் தூண்டுவார். 'உலகில் இவர் ஒரு சுகபுருஷர்,' என்றே மேல் நாட்டார் அவரை மதித்து வந்தனர். அவரது புன்சிரிப்பால் அவர் மேல் நாட்டார் அனைவரையும் தம் வசப்படுத்தினர். அவரைப் போலவே கிராம்வேல் என்பவரும் மகிழ்சியை அனுபவித்தார். எவ்விதத் துன்பம் நேர்ந்த காலத்திலும், அவர் மன மகிழ்ச்சியோடு இருந்தார் எனச் சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர்.

பிள்ளைகளே, மேற்கூறிய உண்மைகளால், மகிழ்ச்சியின் மாண்பையும் அதன் அவசியத்தையும் அறிந்துகொண்டீர்கள் அல்லவா? நீங்கள் ஒவ்வொருவரும் நன்றாய்ச் சிரிக்கப் பழக வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால், எப்போதும் உங்கள் முகத்தில் புன் சிரிப்புத் தவழ்தல் வேண்டும். அதுவே உங்கள் உடல் நலத்துக்கேற்ற அருமையான மருந்தாகும்.

---

9. பத்திரிகை அளிக்கும் பயன்

1. "பத்திரிகை வாசிப்பதை உன் ஒரு நாளைய வேலைகளில் ஒன்றாகக் கொள்." —காந்தியடிகள்

2. "தினந்தோறும் பத்திரிகை வாசிப்பதால், தாய் நாட்டு நிலைமையையும் பிற நாடுகளின் நிலைமையையும் தெரிந்துகொள்ளலாம்; நமது அறிவும் பெருகும்." —இராமானந்த சட்டர்ஜி

ஒரு நாடு எல்லா வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து சிறப்படைவதற்குப் பத்திரிகைகள் மிகவும்

முக்கியமானவை. நவீன நாகரிக முன்னேற்றத்திலும் பல்கலை அறிவிலும் தினந்தோறும் வளர்பிறைபோலப் பெருகி வரும் அமெரிக்கா முதலிய நாடுகள் பத்திரிகையின் பயனை நன்கறிந்து அனுபவித்து வருவதாலேதான் மேல் நிலையை அடைந்துள்ளன. அங்குப் பொருள் மிகுந்த செல்வர் முதல் அன்றாடம் வயிற்றுச் சோற்றுக்கு வருந்தி உழைக்கும் ஏழைத் தொழிலாளர் ஈறாக, அனைவரும் ஒவ்வொரு நாளும் பத்திரிகை வாசியாமல் இரார்; தாங்கள் ஒரு நாளில் செய்யவேண்டும் வேலைகளுள் பத்திரிகை வாசிப்பதையும் ஒரு வேலையெனக் கொண்டிருத்தல், பத்திரிகையின் பயனை அவர்கள் நன்கறிந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது அன்றோ?

கல்வி, கைத்தொழில், வாணிகம், விவசாயம் முதலியவை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் எவ்வெவ்வகையில் உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன என்பது போன்ற சிறந்த செய்திகளும், அரசியல் காரியங்களும், உலக விநோதங்களும், நாட்டு முன்னேற்றத்துக்கு உரிய பலவழிகளும், பற்பல நீதிகள் நிறைந்த நிகழ்ச்சிகளும், அரிய உபதேசங்களும், போர்ச் செய்திகளும், மற்ற விஷயங்களும் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் வெளியாகின்றன.

ஒருநாடு முன்னேற்றம் அடையும் விதத்தை மற்றொரு நாடு பத்திரிகைகளைக் கொண்டு அறிந்து முன்னேறுவதற்கு வழி உண்டாகிறது; இப்படியே கைத்தொழில், விவசாயம், வாணிகம் இவற்றைப் பெருக்கிக் கொள்ளவும் அஃது உதவுகின்றது. 'இன்று அமெரிக்காவில் ஒரு நூதன யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது,'

என்ற தலைப்போடு, அது கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு அடங்கிய பத்திரிகையைப் படிக்கும் பிறநாட்டு அறிஞர் தாமும் முயன்று, அவ்வித யந்திரத்தைச் செய்து முடித்து, அதனால் அமெரிக்கர் அடையும் நலங்களைத் தாமும் அடைகின்றனர். இவ்வாறே, ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நாடும் முன்னேற்றம் அடை-யப் பத்திரிகைகள் பயன்படுகின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாகரிகமடைந்த நாடுகளில் கணக்கற்ற பத்திரிகைகள் இருக்கின்றன. அவற்றால் அந்நாட்டு மக்கள் அடையும் நன்மைகள் அநேகம். நம் தாய் நாட்டிலோ, பெரும்பகுதியினர் உலகச் செய்திகளை அறிந்துகொள்ள ஆவலின்றிக் கிணற்றுத் தவளைகளைப் போலத் தம் வாழ்நாட்களை வீணில் கழிக்கின்றனர். கல்வியும் செல்வமும் பெற்ற மக்களும், பத்திரிகை படிப்பதில் ஊக்கங் காட்டுவ-தில்லை. ஆயினும், இப்போது நமது தமிழ் நாட்டில் பல பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றுள் தின-சரிப் பத்திரிகைகளே உலகச் செய்திகளை அன்றாடம் நமக்கு உணர்த்துவன.

மேல்நாட்டு மாணவர்கள் பத்திரிகைகளைத் தினந்-தோறும் படிக்கிறார்கள். 'உலகச் செய்திகளை அறிவது கல்வியின் ஓர் அம்சம்' என்பது அவர்கள் கருத்தாகும். அவர்களைப் போல நீங்களும் தினந்தோறும் பத்திரி-கைகளைப் படித்துப் பயன் பெறுங்கள்.

10. தெருக் கூட்டுகிறவன் தெரிவிப்பது என்ன?

1. "தூய்மை உடையவன் கடவுளை மிக நெருங்கியவன் ஆகிறான்." —விவேகாநந்தர்

2. "தூய்மை என்பது கடவுள் தன்மைக்கு அடுத்த படியாகும்." ஓர் ஆங்கிலப் பழமொழி

தூய்மை அல்லது பரிசுத்தம் என்பது அகத் தூய்மை, புறத் தூய்மை என இரு வகைப்படும். இவ்விரண்டையும் சீர் தூக்கிப் பார்த்தால், அகத் தூய்மையே மிகச் சிறந்தது என்பது தெரியும். ஆயினும், புறத் தூய்மையும் முக்கியமானதே.

எல்லா மத நூல்களும் கடவுள் தூயவர் என்று கூறுகின்றன. ஏனெனில், அவர் குற்றமற்றவர்; பரிசுத்தமானவர். ஆகவே, குற்றமற்றவன், தூய்மை உடையவன் ஆகின்றான். இந்நிலையே கடவுளுக்கு அடுத்த நிலையாகும்.

ஒருவன் அகத்தும் புறத்தும் தூய்மையுடையவனாய் இருந்தாற்றான் 'தூயவன்' எனப்படுவான். காலையில், தெருக் கூட்டுகிறவனைக் கவனியுங்கள்: அவன் கையில் நீண்ட மூங்கில் கழியை வைத்துக்கொண்டு, அதன் அடியில் உள்ள கருவியால் தெருவில் உள்ள அசுத்தங்களைக் கூட்டி வாரித் தெருவைச் சுத்தப்படுத்துகின்றான். அவன் நமக்குக் கற்பிப்பது என்ன? அவன் கையில் உள்ள கருவியே நமது போத அறிவு; தெருவில் கிடக்கும் அசுத்தங்களே நம் மனத்துள் இருந்து வரும் கெட்ட நினைவுகள். அவன், தெருவில்

அசுத்தப் பொருள்களை அப்புறப்படுத்திச் சுத்தப்படுத்துவது போல, நாமும் நம் மனத்தில் புதைந்து கிடக்கும் தீய நினைவுகளை அறிவு என்னும் சுத்தி செய்யும் கருவியால் அப்புறப்படுத்தல் வேண்டும் என்பதே அவன் நமக்குக் கற்பிக்கும் அறிவுரையாகும். ஆ! தெருக்கூட்டுகிறவன் தொழிலிருந்தும் நாம் அறியக் கூடிய அரும்பொருளைப் பார்த்தீர்களா!

இரண்டாவதாகப் புறத் தூய்மையும் முக்கியமானது. நம் வீடுகளையும் அவற்றைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அழுகிய பொருள்கள், கழித்த பொருள்கள், ஆறிய உணவுப் பொருள்கள் இவற்றை வெகு தூரத்துக்கு அப்பால் எறிதல் வேண்டும். நாம் தினந்தோறும் நல்ல நீரில் நீராடி உடலைச் சுத்தம் செய்ய வேண்டும்; நீராடிய பின்பு அழுக்கற்ற உடையையே உடுத்தல் வேண்டும்; சுத்தமான பாதை வழியே நடத்தல் வேண்டும்; இயன்ற வரையில் எல்லாச் சுகாதார முறைகளையும் பின் பற்றி நடக்க வேண்டும். அவற்றைப் பின் பற்றுவோர் நோயடையார்; உடல் உரம் பெறுவர்; முக அழகு பெறுவர்; புறத் தூய்மையால் படிப்படியாக அகத் தூய்மையும் பெறுவர்.

நாம் புறத் தூய்மையோடு இருப்பதன்றிப் பிறருக்கும் புறத் தூய்மையோடு இருக்கப் போதித்தல் வேண்டும். ஏனெனில், நம்மைச் சுற்றியிருந்து வாழ்பவர் அசுத்தராயிருந்து, நாம் மட்டும் சுத்தமாயிருத்தல் நன்மை தராது. ஆகையால், நாம் கல்வி இல்லாத மக்களுக்கும், சேரிகளில் வாழும் எளிய மக்களுக்கும்

தூய வாழ்வினால் உண்டாகும் கணக்கற்ற நன்மைகளை எடுத்துக் கூறி, அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இஃது ஒரு சிறந்த தொண்டாகும். இந்தத் தொண்டினால், ஒரு சமூகம் எவ்வளவு நன்மை அடைகிறது என்பதை எண்ணிப் பாருங்கள்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா?

---

11. அருள் நிறைந்த அன்னையார்

1. "பிறரிடம் அருள் உடையவன் ஆண்டவன் அருளுக்குப் பாத்திரன் ஆவன்." —இயேசு நாதர்

. "அருள் உடையவர் ஆண்டவனை நெருங்கியவராவர்." —அரிஸ்டாட்டில்

உயர்வு தாழ்வு இன்றி, அறியாத மக்களிடத்திலும் பிற உயிர்களிடத்திலும் உண்டாகும் இரக்கமே அருள் எனப்படுவது. இந்த அருளை உடையவர் வெகு சிலரே ஆவர். இக்குணம் உலக மக்களின் உள்ளங்களிற் குடிகொள்ளுமானால், இவ்வுலகமே பூலோக சுவர்க்கமாக விளங்கும் அன்றோ?

இன்று நம்மை ஆளும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் பாட்டியாரான விக்டோரியா மகாராணியார் அருள் நிறைந்த மனமுடையவர்; அன்பு கனிந்தவர்; வறியர், எளியர், செல்வர், கற்றார், கல்லார் ஆகிய யாவரிடத்தும் ஒத்த அன்பும் அருளும் உடையவர்; இளமை முதற்கொண்டே உயர்ந்த குணங்களைப் பெற்றவர்; தாம் சேர்த்து வைக்கும் பொருளை ஏழைகட்குக் கொடுத்து மகிழ்ச்சி அடைபவர்.

ஒரு முறை, ஒரு நாடகப் பெண் தன் கணவனை இழந்து வறுமையால் வாடுவதை அறிந்த விக்டோரியா இளவரசியார், தம் அன்னையாரிடம் நூறு பவுனைப் பெற்றுத் தம்மிடம் இருந்த நூறு பவுனையும் சேர்த்து, அந்த இருநூறு பவுனையும் அந்த நாடகப் பெண் இருந்த வீடு தேடிச் சென்று அவளுக்குக் கொடுத்துத் திரும்பினர். இப்படி இளவரசியாராக இருந்தபோதே இவர் செய்த அருள் நிறைந்த செயல்கள் பல.

இவர் பட்டம் அடைந்த பின்பு, ஒரு நாள், மந்திரியாரான வெல்லிங்டன் பிரபு ஒரு கடிதத்துடன் இவரிடம் வந்தார். அஃது, ஒரு குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்த தீர்ப்புக் கடிதமாகும். மந்திரியார் அதில் கையெழுத்து இடும்படி இராணியாரை வேண்டினர். அரசியார் அதைப் படித்துக் கண்ணீர் சொரிந்து மந்திரியாரை நோக்கி, "இக்குற்றவாளிக்குச் சாதகமாய்ச் சொல்லத் தக்கது ஒன்றும் இல்லையோ?" என்று கேட்க, மந்திரியார், "இல்லை," என்றனர். அரசியார் மறுபடியும் அவரை நோக்கி, "சிறிது யோசித்துக் கூறும்," என்றனர். மந்திரியார், "இவன் குற்றவாளி என்பதில் ஐயம் இல்லை; எவரோ இவனைப் பற்றி நன்மையாக ஒருமுறை கூறியதாக எனக்கு நினைவிருக்கிறது. இவன் ஏதேனும் நன்மை செய்திருக்கலாம்," என்றனர்.

உடனே அன்னையாரின் அகமும் முகமும் மலர்ந்தன; குற்றவாளி செய்துள்ள நல்ல காரியம் யாதென்றும் கேளாமல், "நல்ல வேளை! நான் பாக்கியசாலியே!" என்று கூறிக்கொண்டே, அந்தத் தீர்ப்புக் காகிதத்தில்

'மன்னிக்கப்பட்டான்' என்று எழுதி, அதன் கீழ் 'விக்டோரியா,' என்று கையெழுத்து இட்டு, மன மகிழ்ச்சியோடு அதை மந்திரியார் கையில் கொடுத்தார்.

அன்புள்ள பிள்ளைகளே, உண்மையான அருள் இச்செய்கை ஒன்றினாலேயே நன்கு விளங்குகின்றது அன்றோ? உங்களுக்குப் பெரிய பட்டம் பதவிகள் வந்த காலத்திலும் நீங்கள் இப்படிப்பட்ட உண்மை அருளைப் பெற்று விளங்கவேண்டும்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!"

—தாயுமானவர்

---

12. உயிரினும் உயர்ந்தது தாய் நாடே

1. "தன் தாய் நாட்டினிடம் அன்பு காட்டாதவன் எதனிடமும் அன்பு காட்டான்." —பைரன்
2. "தாய் நாடே உங்கள் உயிர். தாய் நாடு வாழ்ந்தாற்றான் நீங்களும் வாழ்ந்தவர்கள் ஆவீர்கள்."—

   —காந்தியடிகள்
3. "தாய் நாட்டுக்குத் தொண்டு புரியுங்கள். நமது தாய் நாடு பூலோக சுவர்க்கமாகும்."—

   —சரோஜனி தேவியார்

ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் சோழ மன்னனுக்கும் சேர வேந்தனுக்கும் கடும்போர் நடந்தது. சேரன் தன்மீது படை எடுத்து வருகின்றான் என்பதை உணர்ந்த சோழ வேந்தன், "சோழ நாட்டு வீரர்களே, நாட்டைக்காக்க வாருங்-

கள்; பகைவனை ஒரு பகல் பொழுதில் விரட்டி அடிப்-போம்,'' என்று இளைஞரைக் கூவி அழைத்தான்.

மன்னன் கூறியதைக் கேட்ட சோழ நாட்டுக் கிழவி ஒருத்தி, தன் ஒரே மைந்தனை நோக்கி, "அப்-பனே, நம் தாய் நாட்டின் மீது சேரன் தண்டு எடுத்து வந்துள்ளான். அவனை எதிர்த்து விரட்டச் சோழ நாட்டு இளைஞரைக் கூவி அழைக்கிறான் சோழன். மைந்த, நீ உடனே போருக்குச் செல்; சோழ நாட்டுக்கு நேரும் கதி உனக்கும் நேருவது அன்றோ? ஆதலால், நமது நாட்டைக் காப்பது நமது கடமையாகும். நீ போரில் இறக்க நேர்ந்தால், முன் புறம் காயம் பட்டு இற. அதுவே சுத்த வீரனுக்கு அழகாகும். யான் உன்னைப் பெற்றதற்காகப் பெரிதும் மகிழ்வேன்,'' எனக் கூறி, வாளை அவன் கையிற் கொடுத்தாள்.

வயது முதிர்ந்த தன் தாயின் வீரத்தையும் நாட்-டுப் பற்றையும் கண்ட இளைஞன், இளஞ்சிங்கமாக விளங்கினான். அவன் தன் தாயைப் பணிந்து விடை பெற்றுப் போர்க்களத்திற்குச் சென்றான்.

முதியவள் மைந்தன் முன் அணியில் முகமலர்ச்சி-யோடு நின்று போர் புரிந்தான். சோழ மன்னனும் அவன் ஆற்றலைக் கண்டு வியந்தான். இவ்வாறு போர் புரிந்த இளைஞன், அந்தோ! முடிவில் மார்பில் படுகாயம் பட்டு மாண்டான்.

தன் மைந்தன் முதுகில் காயம் பட்டு மாண்டான் என்று அற்பர் சிலர் கூறக்கேட்ட முதியவள் கடுஞ்-சினம் கொண்டாள். "ஆ! என் மகன்—வீர மகன்—தாய் நாட்டைக் காக்கச் சென்ற மகன்-முதுகில் காயம்

பட்டா இறந்தான்! நன்று! நன்று!! யான் போர்க்களம் சென்று அவன் உடலைக் காண்பேன்: அவர்கள் கூறி-யது உண்மையானல், யான் என்னையே சபித்துக்கொள்-வேன்," என்று சபதம் கூறிக் கையில் வாளேந்திக் கூந்-தலும் குழையும் சோரப் போர்க்களத்திற் புகுந்தாள்.

முதியவள் அங்கிருந்த பிணக் குவியலைப் புரட்டித் தன் மைந்தன் உடலைக் கண்டாள்; அவன்—தன் வீர மகன்—மார்பில் காயம் பட்டு மாண்டு கிடந்ததைக் கண்டாள். அவள் கொண்ட சினம் மறைந்தது; முகம் மலர்ந்தது. "ஆ! என் வீர மைந்தன் மார்பில் காயம் பட்டு மண்டான்! இவனைப் பெற்ற யான் பாக்கிய-சாலியே! உயிரினும் உயர்ந்தது தாய் நாடே என்னும் என் முடிவான கொள்கையை என் ஆருயிர் மைந்தன் பின் பற்றி நடந்தது நினைத்து மகிழத்தக்கது. தாய் நாட்டுக்குத் தொண்டு செய்யவே ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றனர்," என்று கூறி மகிழ்ந்தாள்.

பிள்ளைகளே, அந்தக் கிழவியின் நாட்டுப் பற்றைக் கவனித்தீர்களா!

---

13. இராமகிருஷ்ணரும் சமரசமும்

1. "ஒன்றே குலம், ஒருவனே தேவன்," —திருமூலர்
2. "எல்லா மதங்களிலும் ஒளிர்பவன் ஒருவனே."

—இரவீந்திர நாத தாகூர்

உலகத்தார்க்குச் சமரசத்தையும் சன்மார்க்கத்-தையும் அறிவித்து மறைந்த பெரியாருள் இராமகிருஷ்-ண பரம ஹம்சர் ஒருவராவர். அவர் 1833-ஆம் ஆண்டு

கல்கத்தாவில் அந்தணர் வகுப்பில் பிறந்தார். பள்ளிக் கல்விப் பயிற்சியைப் பெறுவிட்டாலும், அவர் உண்மை அறிஞராய் விளங்கினுர்.

இராமகிருஷ்ணர் பொது நோக்கம் உடையவர்; ஒவ்வொரு மதத்திலும் உண்மை உண்டு என்பவர்; அவருக்கு எம்மதமும் சம்மதமே. உலகில் உள்ள எல்லா மதங்களின் சத்து எதுவோ, அதுவே அவரது உண்மை மதமாகும். யாவரும் ஒருங்கே ஒப்புக்-கொள்ளும் உண்மைக் கொள்கைகள் எவைகளோ, அவைகளே அவர் மதக் கோட்பாடுகள் ஆகும்.

அவர், 'எல்லாம் கடவுள் மயம்' என்னும் உயர்ந்த உணர்ச்சி உடையவர். ஆதலின், அவரிடம் உயர்ந்-தோர், தாழ்ந்தோர் என்ற வேற்றுமை இல்லை; உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும் அவர் ஆண்டவனைக் கண்டு களித்தார்; 'இயற்கையின் ஒப்பற்ற அழகே இறைவன் திருத்தோற்றம் ஆகும்,' என்னும் உண்மை-யை உணர்ந்திருந்தார். அன்பும், மனத் தூய்மையும், தன்னலம் இல்லாமையும், நல்லொழுக்கமும் ஒருங்கே பொருந்தப்பெற்ற இராமகிருஷ்ணரின் அரிய பிரார்த்-தனை பின் வருமாறு காணப்படுகிறது:

அவர் காளியை நோக்கி, "அன்னையே, நான் உயர்ந்-தவன் என்றும், பிராமணன் என்றும், அவர்கள் தாழ்ந்-தவர்கள் என்றும், பறையர்கள் என்றும், நினைக்கின்ற தாழ்ந்த எண்ணத்தை என் மனத்தினின்றும் அடியோடு அகற்றிவிடு: அவர்களும், நானும், நீயும் ஒன்றே அன்றோ?" என்று கூறியிருக்கிறுர்.

ஆ! என்ன அழகிய பிரார்த்தனை! உண்மைப் பொருள் ததும்பும் பிரார்த்தனை! யாவரும் ஒன்றென்றே அறிவுறுத்தும் பிரார்த்தனை!

"பிற மதங்களை நாம் வெறுத்தல் கூடாது. ஏனெனில், அவைகளும் கடவுளைக் காட்டுவனவே. ஆதலின், மக்களே, நீங்கள் வீண் வாதங்கள் புரியவேண்டா; 'என் மதம்; உன் மதம்,' என்று மதம் பிடித்து அலைய வேண்டா; நீங்கள் சமரச ஞானம் பெற்று, 'குலம் ஒன்று; தெய்வம் ஒன்று,' என்னும் உண்மை உணர்வைப் பெற்று, உத்தமர்களாக ஒளிர்வீர்களாக," என்பதே இராமகிருஷ்ணரின் அரிய உபதேசம் ஆகும்.

சிறந்த அறிஞரான இராமகிருஷ்ணர் தழுவிய சமரச மதமே இன்று நம் பெரியாரான காந்தி அடிகளும் தழுவி நிற்பது. இந்தியாவாகிய நமது தாய் நாடு இன்று வேண்டி நிற்பதும் அதுதான். ஆதலால், அன்புள்ள பிள்ளைகளே, நீங்கள் சமரச மத உணர்ச்சியைப் பெற்று, உண்மையான நாட்டு மக்களாக விளங்குதல் வேண்டும்.

"எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றோ? பராபரமே!"

—தாயுமானார்

---

14. நோன்பும் அதன் பயனும்

1. "நோன்பினால் நோயை விரட்டலாம்"—காந்தியடிகள்
2. "நோன்பு இருத்தலால் ஜீரணக்கருவிகள் போதியஓய்வைப் பெற்று நல்ல நிலையை அடையும்; இரத்த ஓட்டம் பலப்படும்" —டாக்டர் முத்து

பண்டைக் காலம் தொட்டே மக்கள் நோன்பைக் கையாண்டு வருகின்றார்கள். நமது தாய் நாட்டில் நோன்பு மிகுதியும் கையாளப்பட்டு வருகிறது குறிப்பிடத் தகுந்தது. நோன்பிருத்தலைப் பற்றிப் பல சமயங்களும் அறிவிக்கின்றன. நோன்பிருத்தலால் உண்டாகும் நன்மை யாது? நோன்பால் நமது உடல் நன்மை பெறும்; குடல் நன்னிலையை அடையும்; உதிரம் சரியாக ஓடும்.

நமது உடலில் நடைபெறும் பல வேலைகள் என்னவென்பது நமக்குத் தெரிவதில்லை. உணவு சீரணமாகும்போது அஃது எம்மாறுதல்களை அடைகின்றது என்பதை நாம் சரிவர உணர்வதில்லை. பலர் புத்தகங்களில் படித்தறிந்தும், அதைப்பற்றிக் கவலை கொள்வதுமில்லை; செம்மையாய் நடப்பதுமில்லை. உடலில் உள்ள உறுப்புகள் நாள்தோறும் தங்கள் வேலைகளை எங்ஙனம் செய்து முடிக்கின்றன என்பதை நாம் அறிதல் வேண்டும்.

உரிய காலங்களில் மல ஜலங்களைக் கழிக்காவிட்டால், குடலில் துன்பம் உண்டாகும். அன்று முதல் உணவு கொள்வது இன்பத்தைத் தராது. இந்நிலையைப் போக்க நோன்பிருத்தல் அவசியம். உடனே குடலில் உண்டாகும் துன்பம் ஒழிந்து, குடல் முன்போல ஒழுங்காக வேலை செய்யும். குடல் நோய் உண்டாவதற்கு முன்னமே, சரியாக நோன்பு முறையைக் கைக்கொண்டு வந்தால், குடல் நல்ல நிலையை அடையும்; இரத்த ஓட்டமும் அதிகப்படும்.

குடலில் அழுக்குத் தங்கி இருத்தல், உண்ண ஆசையற்றிருத்தல், ஏப்பம் உண்டாதல், உடல் சோர்வுற்று இருத்தல், முகத் தோற்றம் மாறுபடுதல் ஆகிய இவைகள் நேரிடும் காலங்களில் நோன்பிருத்தல் வேண்டும். நோன்பினுல் இத்துன்பங்களை ஒழித்து, இன்பத்தைக் காணலாம். குடல் தன் வேலையைச் சரியாகச் செய்யவே நோன்பிருத்தல் வேண்டும் என்பதை மனத்தில் வைத்தல் வேண்டும்.

வாரத்துக்கு ஒரு முறையோ, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையோ, மாதத்துக்கு ஒரு முறையோ நோன்பிருத்தல் இன்றியமையாதது. அன்று தண்ணீரைத் தவிர வேறு எந்த உணவையும் உட்கொள்ளலாகாது. இங்ஙனம் அடிக்கடி நோன்பு இருந்தால், சீரணக் கருவிகள் ஓய்வைப் பெற்று மகிழ்ந்து, மீண்டும் தங்கள் வேலைகளைச் செவ்வையாகச் செய்து வரும். இதுவே நோன்பிருத்தலின் இரகசியம் ஆகும்.

நோன்பிருந்த மறு நாள் மிதமிஞ்சி உண்ணலாகாது; அது மிக்க கேடு பயக்கும். மிதமான உணவை ஒழுங்காக உட்கொள்ளல் வேண்டும். அன்புள்ள பிள்ளைகளே, நீங்கள் இந்த முறையைப் பின்பற்றி வருவீர்களானுல், நோயற்று, உடல் உரம் பெற்று, என்றும் குன்றுத இளமை பெற்று, பொலிவுற்று வாழ்வீர்கள்.

---

15. 'நானும் உங்களில் ஒருவன்'

1. "காப்பவன் அரசனுவானே அன்றி, ஆள்பவன் அரசன் ஆகான்."

—கம்பர்

2. "அரசன் பொது மக்களுக்கு ஊழியனே ஆவன். மக்களின் இன்ப துன்பங்கள் அரசனுக்கும் உரியவை."

—இரவீந்திரநாத தாகூர்

நாட்டு மக்களைப் பாதுகாக்கும் மனிதனே—தனது தூய வாழ்வினால் மக்களுக்குப் பல நலங்களை அறிவுறுத்தும் மாண்புடையவனே—அரசன் எனப்படுவான். அன்பு வழி காட்ட, அறம் துணை செய்யக் குடிகளுக்குத் தொண்டு செய்து வாழ்வதே வேந்தனது அற நெறியாகும். எப்பொருளையும் ஆராயும் அறிவும், அறச் செயலும், பெருந்தன்மையும், வீரமும், இவை போன்ற பிற உயர்ந்த குணங்களும், நீதி தவறாத நடு நிலையும் பெற்றிருக்கும் மன்னன், தன் பெயரையும் புகழையும் உலகம் உள்ளளவும் நிலை நிறுத்தி மறைகின்றான். இத்தகைய உயர்ந்த கொள்கைகளும் குணங்களும் நம் நல்ல தாயாரான விக்டோரியா மகாராணியாரிடம் பொருந்தி இருந்தன என்பதை முன்னொரு பாடத்தில் படித்தோம்.

பிரிட்டிஷ் தீவுகளில் ஒன்றான அயர்லாந்தின் தலைவராக விளங்கும் டிவாலரா மேல் கூறப்பட்ட உயர்ந்த குணங்களும் கொள்கைகளும் உடையவர். உயர்ந்த மெல்லிய உடலையும், மடிந்த தாடைகளையும், குழி விழுந்த கண்களையும் கொண்ட இப்பெரியார் அருங்குணங்களே அவதாரமாகத் தோன்றியவர் என்பது

பிழையாகாது. எத்துன்பம் நேரினும், இவர் உண்மையினின்றும் பிறழார்; மறைவாகச் செய்யும் எத்தகைய வேலைகளையும் விரும்பார்; தம் நாடு, தம் மக்கள் என்றும் நலம்பெற்று இன்பம் அடையவேண்டும் என்னும் பேரவாவே இப்பெரியாரின் சமயமாகும். நாட்டு முன்னேற்றத்துக்குரிய துறைகளே இவர் சமயக் கோட்பாடுகள் ஆகும். தம் நாடு மிக்க உன்னத நிலையில் இருக்கக் காண வேண்டுமென்பதே இவரது விருப்பமாகும்.

இவர் முதல் முதலில் ஒரு கலாசாலையில் கணித போதகாசிரியராக இருந்தவர். நாட்டுப் பற்று இளமை தொட்டே இவர் உள்ளத்தில் ஊற, அதன் பயனாக இவர் தம் வேலையை விட்டு அரசியல் காரியங்களில் உழைக்கலானார். அன்று முதல் இவர் அடைந்த தோல்விகளும் துன்பங்களும் பல. எனினும், உயர் குணங்களையுடைய இப்பெரியார், தமக்கு நேர்ந்த தோல்விகளால் மனம் தளராமல், அயர்லாந்து தேசத்தின் மக்களின் நலத்துக்கே உழைக்கத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்தனர். குடிகளும் இவருடைய அரிய சேவையைப் பாராட்டி, "இவரே நம் நாட்டுத் தலைவராக இருக்கத் தக்கவர். நம்மை நல்ல நிலைக்குக் கொண்டுவரும் இரட்சகர் இவரே," என்று எண்ணி, இவரைத் தங்களுக்குத் தலைவராகக் கொண்டார்கள். ஆ! உயர்ந்த குணங்களாலும், உழைப்பினாலும், தூய வாழ்வினாலும் ஒருவர் அடையும் பெருமை என்னே! இதுவன்றோ இன்ப நிலை!

டிவாலரா அரசியல் உலகில் மாசற்ற ஒழுக்கம் உடையவர். இவர் தம்முடைய உயர்ந்த கொள்கைகளை எடுத்துக் கூறுகையில் இவர் விழிகளில் தீப்பொறி பறக்கும். இவர் பேசும் கூட்டத்தில் ஊசி விழுந்தாலும் அதன் ஓசை கேட்கும்படி அமைதி குடிகொண்டிருக்கும். "நானும் உங்களில் ஒருவன். உங்கள் இன்ப துன்பங்கள் என்னுடையனவே," என்று இவர் உருக்கமாகக் கூறும்போது ஆண்களும் பெண்களும் வாயைத் திறந்த வண்ணம் அன்புருகத் தங்கள் இரட்சகராகிய இவரை நோக்கியவாறு இருப்பார்கள்.

இவருடைய தியாக சிந்தையையும் உயர்ந்த குணங்களையும் பகிர்ந்துகொண்டவர் போல விளங்குபவர் இவர் ஆருயிர் மனைவியார். அயர்லாந்தின் சுதந்தர வீரரின் மனைவியரான அந்த அம்மையார், தம் ஏழு குழந்தைகளையும் கவனித்துக்கொண்டு, மிக எளிய குடும்ப வாழ்க்கையை ஆடம்பரமின்றி நடத்திவருவது பொன்னே போலப் போற்றத் தக்கது.

அயர்லாந்து வாசி ஒவ்வொருவனும் தன் வீட்டில் தன் இரட்சகரான டிவாலராவின் படத்தை வைத்துப் பூசித்து வருகின்றான் என்றால், இத்தலைவரது மாண்பை என்னவென்று புகழ்வோம்!

16. சென்னைச் சேவா சாதனம்

1. "சேவா சாதனத்தால் பெண்களின் வாழ்க்கை பெருமை அடைகின்றது." —காந்தியடிகள்

2. "நூல் கல்வியோடு, பின்னல், தையல், நெசவு, சமைத்தல், குடும்பப் பாதுகாப்பு முதலியவற்றைக் கற்பதால், பெண்கள் நலம் பெறுவார்கள். இவற்றைப் போதிக்கும் சேவாசாதனங்கள் போற்றற்குரியன." —ஸர். விஸ்வேஸ்வரையா

உலகம் ஆண் பெண் என்னும் இருவகை உயிர்களால் ஆக்கப்பட்டுள்ளது. இவை ஒன்றுபட்டால் அன்றி, உலகம் நல்ல முறையில் நடைபெறாது. பெண் தாய் என்னும் நிலையில் இருப்பதால், பெண்ணின் நன்மை பெரிதும் காப்பாற்றப்படல் வேண்டும். ஒரு நாட்டு நன்மை அந்நாட்டுப் பெண் மக்கள் நிலையைப் பொறுத்தே நிற்பது. பெண் பெருமை பெற்றால், நாடும் பெருமை பெறும்.

பெண்கள் முன்னேற்றம் அடையவேண்டுமானால், பெண் கல்வி அவசியமானது. பள்ளிக் கல்வியோடு குடும்பக் கல்வியும் வேண்டற்பாலது. குடும்பக் கல்வியாவது, ஒரு பெண் தன் வீட்டையும், பொருள்களையும், குழந்தைகளையும், தன்னையும் சுத்தமாக வைத்துக் கொள்ளல்; பின்னல், தையல், நெசவு முதலிய கைத்தொழில்களைக் கற்றல் முதலியனவாம். பள்ளிக் கல்வியால் உலக இயலும், நாட்டு முன்னேற்றத்துக்குரிய நிலையும், பிறவும் அறியலாம். ஆகையால், பள்ளிக் கல்வியும் குடும்பக் கல்வியுமே பெண்களுக்

குற்ற கல்வி எனப்படும். இவ்விரண்டைப் போதிக்கும் நிலையங்கள் சில நம் தாய்நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ளன. இவற்றிற்குச் சேவா சாதனம் என்பது பெயர். இவற்றுள் சென்னைச் சேவா சாதனமும் ஒன்றாகும்.

இஃது, இந்திய மாதர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வருகின்றது. பல பெருமக்களின் பொருள் உதவியாலும், மாதர் சங்கத்தார் அன்புநிறைந்த மேற்பார்வையாலும் ஆரம்பத்தில் மிகச் சிறியதாக இருந்த இச்சாதனம், இப்போது சென்னை மாகாணத்திலேயே சீரும் சிறப்பும் பெற்றுள்ளது; மிகப் பெரிய கட்டடத்தையும், மாணவிகள் வசிக்கச் சிறு குடிசைகளையும் பெற்று, அழகிய சிங்காரத் தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ளது.

லேஸ் பின்னுதல், பின்னல் வேலை, தையல்வேலை, துணி வெட்டுதல், நெசவு வேலை, ஜிகினா வைத்துத் தைத்தல், பிரம்பைக்கொண்டு பின்னுதல் முதலிய பல கைத்தொழில்கள் இங்குள்ள மாணவிகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன; மேலும், உபாத்தியாயினி வேலையும் வைத்தியப் பயிற்சியும் போதிக்கப்படுகின்றன.

இச்சேவா சாதனத்தில் தயாரிக்கப்படும் பொருள்கள் உடனுக்குடனே விலையாய்விடுதல் குறிப்பிடத்தக்கது. இதில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு நிமிடமும் சுறுசுறுப்புடன் தன் வேலையைச் செய்தல் கண்டு மகிழத்தக்கது. சாதன விடுதியை ஒவ்வொருநாள் ஒவ்வொரு மாணவி மேற்பார்க்கவேண்டும். மாணவிகள் தங்கள் பிற்காலவாழ்வில் தங்கள் வீடுகளையும் பொருள்களையும் வைத்துக்கொள்ளும் முறை,

சாதன விடுதியையும் பொருள்களையும் வைத்துக்கொள்-ளும் முறையைக் கொண்டு நேர் முகமாகக் கற்பிக்கப்படுகிறது.

சென்னைச் சேவா சாதனம் பணக்காரப் பெண்க-ளுக்கு மட்டும் ஏற்பட்டது அன்று. அஃது ஏழைப் பெண்களுக்கும், விதவைகட்கும், அநாதைக் குழந்தை-கட்கும் அபயமளிக்கும் உயர்ந்த ஸ்தாபனமாகும். இவர்-களுக்குப் போதிய கல்வியும் கைத்தொழிலும் கற்-பிப்பதோடு நில்லாமல், இவர்கள் பிற்கால வாழ்க்கை சுகமே நடக்க வேலை பார்த்துத் தருவதும் சேவா சாத-னத்தின் சிறந்த கடமையாக இருப்பது போற்றற்-குரியது.

பெண்கள் தாங்களே சுதந்தரத்தோடு வாழவும், நிறைந்த அறிவைப் பெறவும் சிறந்த தொண்டு ஆற்றி வரும் இச்சென்னைச் சேவா சாதனம், வரவர மிக்க உன்னத நிலையைப் பெற்று வருவது தமிழ் நாட்டுக்கே பெருமையன்றோ? இதனைப் பெருமக்கள் ஆதரித்து, இது போன்ற சாதனங்களை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்தாபித்துப் பெண்கள் நலத்துக்குப் பாடு பட்டால், அவர்கள் பெருந்துணை புரிந்த வள்ளல்களாவார்கள். நம் தாய் நாட்டுச் சகோதரிகள் நலம் பெற்றால், சகோ-தரரும் நலம் பெறுவர்; இனி நம் நாட்டு வீரமக்களாக விளங்கும் எதிர் காலப் பிள்ளைகளும் அறிவு ஒழுக்கங்-களில் சிறப்புற வழியுண்டாகும். சுருங்கக் கூறினால், இத்தகைய சேவா சாதனங்களால் நம் தாய் நாடு விரை-வில் முன்னேற்றம் அடையும் என்று கூறலாம்.

17. சொல் தவருத சக்கரவர்த்தி

1. "சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே மனிதர்களில் சிறந்தவன்." —ஜேம்ஸ் ஆலன்

2. "நீ எந்நிலையில் இருப்பினும், சரியே; சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள்; நீ உயர்வடைவாய்." —தாமஸ் கார்லைல்

ஏறக்குறைய ஐரோப்பா முழுவதையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தி மன்னர் மன்னனுகக் குன்ருத புகழுடன் விளங்கிய பிரஞ்சு வீரனை நெப்போலியன் சொல் தவருத சக்கரவர்த்தி எனப் பலராலும் புகழப்படுபவன். அவன் பள்ளியில் படிக்கும் இளைஞனயிருந்த போது பழங்களை விற்கும் கிழவி ஒருத்தியிடம் நட்புக் கொண்டான். அவ்விளைஞன் சில வேளைகளில் பணம் தந்து பழங்களை வாங்கிக்கொள்வான்; பணம் இல்லாச் சமயங்களில் கடனுக வாங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தான். அவன் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் வழக்கமுடையவன் என்பதை அறிந்துகொண்ட கிழவி, அவன் வேண்டும்போது எல்லாம் கடனுகப் பழங்களைக் கொடுத்தாள்.

பின்னர், நெப்போலியன் தான் வாசித்துக்கொண்டிருந்த பள்ளியையும் ஊரையும் விட்டுச் செல்ல நேர்ந்தது. அப்போது அவன் கையில் பணம் இல்லை. அவன் கிழவியை அழைத்து, "பாட்டீ, யான் திடீரென்று வேற்றூருக்குச் செல்ல நேர்ந்திருப்பதால், உன் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. ஆயினும், விரைவில் உன் கடன் தீர்க்கப்படும்," என்ருன். கிழவி மகிழ்வுடன் அவனுக்கு விடை தந்தாள்.

பல ஆண்டுகள் சென்றன. நெப்போலியன் தான் படித்துக்கொண்டிருந்த நகரத்துக்கு வந்தான். எந்நிலையில் வந்தான்? பிரஞ்சு நாட்டுச் சக்கரவர்த்தி என்னும் ஒப்புயர்வு இல்லாத பதவியில் வந்தான். அந்நிலையிலும் அவ்வுத்தமன் கிழவியை மறந்துவிடவில்லை. அவன் ஒரு நாள் மாறு வேடம் அணிந்து, தன் மெய்காப்பாளனோடு கிழவியின் சிறு குடிசையை அடைந்தான்; அவளிடமிருந்து பழம் ஒன்றை வாங்கித் தின்றுக்கொண்டே, "பாட்டீ, நம் சக்கரவர்த்தி இந்நகருக்கு வந்திருப்பதாக நீ கேள்விப்பட்டாயா? அவரை நீ அறிவாயா?" என்ருன். கிழவி, "ஆம்; நான் அவரை நன்கறிவேன். அவர் இங்குப் பள்ளிச் சிறுவராக இருக்கையில் என்னிடம் பழங்கள் வாங்குவது வழக்கம்," என்ருள்.

இரண்டொரு நிமிஷங்கள் கழிந்தன. பின்பு நெப்போலியன், "பாட்டீ, அவர் அவ்வப்போது உனக்குப் பணம் தவருமல் கொடுத்தாரா?" என்று கேட்டான். "ஆம்," என்று கிழவி உடனே விடை அளித்தாள். "இல்லை, இல்லை; நீ மறந்து கூறுகின்ருய். அவர் இந்நிலையிலும் உனக்குப் பணம் தர வேண்டியவராக இருக்கிருர்," என்ருன் நெப்போலியன்.

உடனே கிழவி நெப்போலியனை வியப்புடன் உற்று நோக்கினள். நெப்போலியன் நகைத்துக்கொண்டே, "பாட்டீ, நீ அவரைச் சரியாய் அறிந்துகொள்ளவில்லையோ? நான்தான் அந்தச் சக்கரவர்த்தி," என்று கூறினன்.

கிழவி அவனைக் கூர்ந்து நோக்கினள்; "ஆம்! ஆம்! அவரே நீர்!" என்று கூறி, நெப்போலியன் பாதங்களில்

வீழ்ந்து பணிந்தாள். பணிந்த கிழவியைப் பரிவுடன் தூக்கிய வேந்தர் பெருமான், "நான் வாங்கிய பழைய கடன் இப்போது உனக்குத் தரப்படும்," என்று கூறி, அவளுக்குத் திரண்ட செல்வத்தைத் தந்தான்; அவள் வாழ்ந்த சிறு குடிசையை மாளிகை ஆக்கினன்; அவள் குடும்பத்தை மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தான்.

பிள்ளைகளே, நெப்போலியனுடைய சொன்ன சொல்லை நிறைவேற்றும் திறமையையும், ஞாபகச் சக்தியையும், அன்பு கனிந்த அறச் செயலையும் நாம் என்னவென்று கூறி ஆச்சரியப்படுவது!

---

18. 'தேடு; உனக்குக் கிடைக்கும்.'

1. "கேட்பவன் கொடுக்கப்படுவான்." —இயேசு நாதர்
2. "தன்னம்பிக்கையோடு முயற்சி செய். வெற்றி உன்னுடையதே ஆகும்." —ஜேம்ஸ் ஆலன்

'தேடு; உனக்குக் கிடைக்கும்,' என்பது மறைமொழி. நமது வாழ்க்கையின் வெற்றி இதில் அடங்கி உள்ளது. தேடினுற்றான் எப்பொருளும் நமக்குக் கிடைக்கும் என்னும் உண்மையை நமது அநுபவத்தினுல் நாம் அறிந்திருக்கின்றோம் அல்லவா? இங்ஙனமே, தன்னம்பிக்கையோடு நமது வாழ்க்கையைச் சீர்படுத்தி முன்னேற நல்ல வழியில் முயல வேண்டும். முயன்றால் முடியாதது ஒன்று உண்டோ?

எதற்கும் சிரத்தை முதலில் வேண்டும். நீங்கள் உங்களிடம் நம்பிக்கை உடையவர்களாயிருத்தல் வேண்டும். தன்னம்பிக்கை இல்லாவிட்டால், எக்காரியத்திலும்

சித்திபெற இயலாது. இன்று உலகத்திற் சிறந்தஅறிஞர்களுள் ஒருவரான பிரிட்டிஷ் பிரதம மந்திரியாரான இராம்சே மாக்டோனல்டு ஒரு சாதாரணக் குடும்பத்திற் பிறந்தவர்; குதிரை லாயத்திலே வேலை பார்த்தவர்; மீன் பிடித்து விற்று வந்தவர். அவர் இப்போது எந்த நிலையில் இருக்கின்றார்? உலகிற் சிறந்த மிகப்

பெரிய வல்லரசின் பிரதம மந்திரியாராக இருக்கின்றார். அதற்குக் காரணம் என்ன? தன்னம்பிக்கையும் சலியாத உழைப்புமே அவரை இந்நிலைக்குக் கொண்டு வந்தவை. 'தேடு; உனக்குக் கிடைக்கும்,' என்னும் செம்மொழிக்குச் சிறந்த உதாரணமாக விளங்குபவர் அவரல்லரோ?

மிகச் சிறிய ஒரு குடிசையில்—உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாத ஏழைக் குடும்பத்தில்—பிறந்தவர் ஆபிரகாம் லிங்கன் என்பவர். இவர் மிகக் குறைந்த கல்வி கற்றுத் தம் தந்தையாரோடு விறகு வெட்டிப் பிழைத்துவந்தார்; பின்பு காடுகளைத் திருத்தி, விவசாயம் செய்து, தமது குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டே கல்வி கற்றார். இவர் செய்யாத இழி

தொழிலே இல்லை என்னலாம். இவர் கசாப்புக் கடையும் வைத்திருந்தார். ஆயினும், இவர் 'தேடு ; உனக்குக் கிடைக்கும்,' என்னும் நல்லுரையைச் சிரத்தின்மேல் தாங்கித் தந்நம்பிக்கையோடு உழைக்கலானார் ; சிறிது கல்வி கற்றதும், ஜன சமூகத் தொண்டு புரியத் தொடங்கிச் சட்டஞானம் பெற்று வக்கீலானார்; பின்பு, ஏழைகள் சார்பில் உழைத்துச் சட்டசபையில் அங்கத்-

தினரானார்; மதுபானம், அடிமைத்தனம்முதலிய கொடுமைகளை ஒழிக்கத் தீவிரப் பிரசாரம் செய்து, என்றும் குன்றாத புகழடைந்தார். முடிவில் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவில் உள்ள நீகிரோவர்களுக்குச் சமூக வாழ்வில் சுதந்தரம் அளித்த சுந்தரர் இவரே. ஆ! இவரது தூய பெயர் உலகம் உள்ளளவும் நிலைபெற்றிருக்குமன்றோ!

ஆதலின், அருமைப்பிள்ளைகளே, 'தேடு; உனக்குக் கிடைக்கும்,' என்னும் செம்மொழிப்படிஉழைத்த பெருமக்களின் வரலாறுகளை நீங்கள் படியுங்கள்; அவர்களின் அறிவுரைகளில் நம்பிக்கை கொள்ளுங்கள்; உங்கள் மனத்தில் ஊறிக் கிடக்கும் பலவீனத்தை வேரோடு களைந்து எறியுங்கள்; 'நாம் ஒன்றுக்கும் உதவோம்,' என்ற கேவல நினைவை அகற்றி, 'நாம் ஆற்றல் உடையோம்; எக்காரியத்திலும் வெற்றி பெறுவோம்,' என்னும் சிறந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் வளர்த்து வாருங்கள்; 'நாம் அரிய செயலைச் செய்து முடிக்கவே பிறந்துள்ளோம்,' என்பதை ஒருபோதும் மறக்கவேண்டாம்; 'காலம் சரியில்லை; யோகமில்லை,' என்ற சோம்பேறித்தனமுள்ள வார்த்தைகள் உங்கள் வாயினின்று வர விடாதீர்கள். முழு ஊக்கத்துடனும் தன்னம்பிக்கையோடும் உழைத்தால், வெற்றி உங்களுடையதேயாகும்.

19. சீவ காருண்யம்

1. "மனிதர்களிடம் காட்டும் இரக்கத்தையே பிராணிக-ளிடத்திலும் செலுத்த வேண்டும். அதுவே சீவ காருண்யம் எனப்படும்." —புத்த மகான்

2. "பிராணிகளிடம் இரக்கம் காட்டுவதே உண்மை மனிதனது ஒழுக்கமாகும்." —டார்வின்

கொடிய விலங்குகளானாலும் அவை நம்மை வீணா-கத் துன்புறுத்துவதில்லை. அன்புக்கு அவை கட்டுப்-படுகின்றன. கிராமங்களில் உள்ள வீடுகளில் நல்ல பாம்புகள் பகலில் நடமாடுவதையும், அவற்றைக் கிரா-மவாசிகள் தெய்வமாகக் கொண்டாடுவதையும் நாம் இன்றும் காணலாம். காட்டில் வாழ்ந்த சிங்கம் ஆண்-ட்ரகிள்ஸ் என்னும் அடிமையினிடம் எவ்வளவு அன்-பாயிருந்ததென்பதை எண்ணிப் பாருங்கள்! ஆகவே, அன்பு வழிகாட்ட, விலங்குகள் கொடுமை நீங்கி நல் வழிப்படுகின்றன.

நமக்குத் தொண்டு செய்யும் குதிரை, மாடு, கழுதை, பசு முதலிய விலங்கினங்கள் அன்பே உருவா-னவை. அவற்றின் குணாதிசயங்களைக் கவனிக்கும் ஒருவன், அவற்றைப் போற்றாமல் இருக்கமாட்டான். கழுதை எவ்வளவு சுமையைத் தாங்கிக்கொண்டு பொறுமையோடு வழி நடக்கிறதென்பதை எண்ணிப் பாருங்கள்! குதிரை வண்டியை இழுத்துக்கொண்டு எத்தனை மைல் தூரம் ஓடுகின்றதென்பதை நினைத்துப் பாருங்கள்! மாடுகள் நம்மோடு ஒத்துழையா விட்-டால், நமது உழவு சிறப்படையுமோ? வயல்களின்

கதி யாதாயிருக்கும்? யந்திரங்கள் இல்லாத எளிய இந்தியாவில் யந்திரங்களைப்போல வயல்களில் உழைக்கும் மாடுகளின் மாண்பே மாண்பு! இந்தியர் உயிர் பெற்றிருக்க, உழுதொழில் நடத்தும் மாடுகளல்லவா காரணமாகின்றன? அரிய தொண்டு செய்யும் இவற்றுக்கு நாம் தொண்டு செய்தலன்றோ சிறந்தது?

பசு நமக்குப் புரியும் நன்மைகள் பல: அது தனது அரிய தூய வெண்மையான பாலினால் நம்மை வளர்க்கின்றது; தன்னிடமிருந்து கழியும் பிறவற்றால் நம் வீடுகளைத் தூய்மையாக்குகின்றது. ஆதலின், இந்துக்கள் அதைத் தெய்வீகப் பிறப்பென எண்ணுகின்றார்கள். உண்மையில் அது மனிதர்க்கு—காப்பி, கோக்கோ, டீ, ஓவல்டைன் முதலிய பானங்கள் மிகுதியாகப் பெறக்கூடிய இக்கால மனிதர்க்கு—உயிர் நாடியாக உள்ளது என்பதில் ஐயம் என்ன?

ஆடு, கோழி முதலிய பிராணிகள் அழகே உருவென வந்தவை; சாந்தத்துக்கு இருப்பிடமானவை. புறாவைக் கவனியுங்கள்: 'இல்லற இலட்சணத்தை உள்ளவாறு உணர்த்துவது புறா,' என்று இதிகாசங்கள் கூறுகின்றன. அஃது எவ்வளவு அழகாகவும் மேன்மையாகவும் இருக்கிறது! அதன் அழகு ஆண்டவனது அழகே அன்றோ! அழகைக் காண்கையில் அன்பு அரும்புகின்றது; யாவும் கடவுள் மயம் என்னும் தூய நினைவு எழுகின்றது. ஆ! கடவுளின் நினைவை ஊட்டும் இவ்வழகிய பிராணிகளின் இயல்புதான் என்ன!

கிராமங்களுக்குச் சென்று பாருங்கள்: அங்குள்ள குழந்தைகள் நாய்களோடும், பூனைகளோடும், கன்றுகளோடும் விளையாடிக்கொண்டிருப்பார்கள். நாய்கள், பூனைகள், கன்றுகள், மாடுகள், பசுக்கள் முதலியன விலங்கினங்களெனக் கிராம வாசிகள் எண்ணுவதில்லை; தங்கள் மக்களெனவே அவற்றை எண்ணி நடத்தி வருகின்றார்கள். அவை வீடுகளுக்குள் போவதையும் வருவதையும் காண்கையில், மிகப் பழக்கப்பட்ட சிறுவர்களைப் போலக் காணப்படுகின்றன.

எறும்புகளையும் தேனீக்களையும் நீங்கள் பாருங்கள்: அவை ஒரு நிமிஷமேனும் சும்மா இருக்கின்றனவா? எந்த நிமிஷமும் அவை வேலை செய்தவண்ணமாகவே இருக்கின்றன; எறும்புகள் மழைக் காலத்துக்கு வேண்டும் உணவைக் கோடையிலேயே சேமித்து வைத்துக்கொள்கின்றன என்றால், அவற்றின் நுண்ணறிவை என்னென்பது! அவ்வறிவு ஆறறிவு படைத்த மனிதராகிய நம்மிடத்தும் இல்லையே!

ஆகவே, அன்புள்ள பிள்ளைகளே, இவற்றால் நாம் அறிவது என்ன? எத்தகைய பிராணியும் ஆண்டவனால் படைக்கப்பட்டது. ஒவ்வொன்றினிடத்திலும் ஒவ்வொரு குண விசேடம் காணப்படுகிறது. அவை, இயற்கை அழகையும் இறைவன் அருட்பொலிவையும் உணர்த்த வந்த தூதர்கள் என மதித்து, அவற்றிற்கு நாம் எள்ளளவும் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும். நீங்கள் அன்பு என்னும் அருமருந்தால் அவற்றை உங்கள் வசமாக்கி, எல்லாம் அன்பு மயமாக விளங்கச் செய்ய வேண்டும். அன்பே ஆண்டவன் அல்லவா?

20. ஆனந்த நிலை

1. "ஒருவன் குரோதத்தைவென்று அதற்குக்காரணமான அறியாமையை அகல ஓட்டி, பிறரிடம் தீமையைக் கவனியாதிருக்கும் நிலையே ஆனந்த நிலை எனப்படும்."

—ஜேம்ஸ் ஆலன்

2. "தான் செய்யும் ஒவ்வொரு செயலும் நன்மையா தீமையா என்பதை ஆராய்ந்து பார்த்து, நன்மைசெய்பவனே ஆனந்த நிலை அடைபவன் ஆவன்."

—காந்தியடிகள்

'நான் செய்ய நினைக்கும் இச்செயல் யாவர்க்கும் இசைந்ததா? அல்லது என்னளவிலேனும் தவறற்ற நன்மை தர வல்லதா? இதனால், என் மனம் நிறைந்த மகிழ்ச்சியைப் பெற இயலுமா?' என்ற வினாக்களை ஒருவன் ஒன்றன் பின் ஒன்றாகத் தானே கேட்டுக் கொள்வானாயின், சிறந்த விடை பெறுதல் எளிது. இங்ஙனமே, பள்ளிச் சிறுவனும், 'பள்ளிக்குச் செல்லும் யான் மாணவன் அல்லவா? என் கடமைகள் எவை? நான் ஏன் தினந்தோறும் படிக்கச் சோம்பல் அடைகிறேன்? தினந்தோறும் என் கடமைகளைச் செய்தால் உண்டாகும் நன்மை என்ன? செய்யாவிட்டால் உண்டாகும் தீமை என்ன? என் பெற்றோர் என்னிடமிருந்து எதிர் பார்ப்பதென்ன?' என்ற பல கேள்விகளைத் தானே கேட்பின், சிறந்த விடை பெற்றுத் தெளிவான் அல்லவா? உண்மை விடை பெற்ற பின்பு, அவன் உண்மை மாணவனாக விளங்குவான். அப்போது அவன் இருக்கும் நிலையே ஆனந்த நிலை எனப்படும்.

ஒருவனைக் கோபித்துப் பேசிய வேறொருவன், அமைதி விளங்கும் இன்பப் பூங்காவில் இனிதிருந்து, 'நான் ஏன் அவன்மீது சினம் கொண்டேன்? அவன் கூறியதில் என்ன தவறு இருக்கின்றது? நான் என் வருவாய்க்கு மேற்பட்ட செலவு செய்பவனே. அறிவின்றியே—யோசனை இன்றியே—யான் செலவு செய்தேன் அல்லவா? இவ்வுண்மையைத்தானே அவன் கூறினான்? என்னை நல்ல வழியில் திருப்பவன்றோ அவன் முயன்றான்? நான் அவனைக் கோபித்தது பெரும்பிழை. நான் எனக்கு நன்மை புரிய முயன்றவனைக் கோபித்த கொடியவனானேன். இக்கொடுமையை எப்படிப் போக்குவேன்! ஆம்; அவன் கூறியபடி என் வீண் ஆடம்பரத்தை முற்றும் விட்டுவிட்டு, வரவுக்கேற்ற செலவு செய்து, நல்ல வழியில் வாழ்வதே எனது கடமை,' என உணர்ந்து, அதன்படி நடந்து வாழும் நிலையே இன்ப நிலை என்பது.

ஒருவன் தன் சலியாத ஊக்கத்தாலும் உழைப்பாலும் முன்னேறுவதைக் கண்டு பொறாமை கொள்ளும் பொறாமையாளன் சோம்பேறி எனப்படுவான். அவன் சிறிது நேரம் சிந்திப்பானாயின், 'ஆ! நான் ஏன் அவனிடம் பொறாமை கொள்ள வேண்டும்? அவன் எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே! அவன் உழைத்து உயர் நிலையை அடைகின்றான். நானும் அவ்வாறு உழைத்தால், உயர் நிலையைப் பெறுவேன். ஆகவே, நான் வீணாக அவன்மீது பொறாமை கொண்டது தவறன்றோ? இக்குணம் மிகவும் கேவலமானது இஃது என்னைக் கெடுத்து வருகின்றது. இதனை வேரோடு களைந்து, யான் முன்-

னேறுவேன்,' என்பவை போன்ற சிறந்த எண்ணங்கள் அவன் மனத்தில் ஒளி விட்டு விளங்கும். அந்த நிமிஷம் முதல் அவன் நல்லவனுவது திண்ணம்; தன் எண்ணங்களின் படி உழைத்து உயர்நிலை அடைவாஞனல், அவன் பெறுவது ஆனந்த நிலையே.

பொதுவாக ஒரு வகுப்பில் படிக்கும் பிள்ளைகளில் இரண்டொருவரே முதல்வராக இருத்தல் வழக்கமாக இருந்து வருகிறது. இதற்குக் காரணம் யாதெனப் பிற மாணவர் ஒரு நிமிஷமேனும் சிந்தித்தது உண்டா? "ஐயோ! நாம் இவ்வுண்மையை உணராததால் அன்றோ தாழ்ந்த நிலையில் இருக்கின்றோம்? அவர்களும் நம்மைப் போன்ற பிள்ளைகள் அல்லவா? அவர்களுக்குள்ள புத்தகங்களும் பாடங்களும் நமக்கும் இருக்கின்றன அல்லவா? அவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்களே நமக்கும் போதிப்பவர்கள் அல்லவா? அப்படி இருக்க, நாம் ஏன் முதல் வரிசையில் இருப்பதில்லை?" என்ற வினக்களைத் தாங்களே கேட்டுப் பார்க்கட்டும்: அவர்களைப் போல முதல் வரிசையில் வரவேண்டும் என்ற ஊக்கம் இவர்கள் உள்ளத்தில் குடிகொண்டுள்ளதா? இல்லை! இல்லை!! இதுவே இவர்கள் வீழ்ச்சிக்குக் காரணம்.

இந்த ஊக்கம் உங்கள் உள்ளத்தில் பதியுமானல், நீங்கள் உழைத்துப் படிப்பீர்கள்; வேலை செய்வீர்கள்; உங்கள் கடமைகளை நிறைவேற்றுவீர்கள். நீங்களும் அவர்களைப் போலவே முன் அணியில் வெற்றி வீரர்களாக விளங்குவீர்கள். அப்போது நீங்கள் இருப்பது எந்நிலை எனப் பெயர் பெறும்? அதுவே ஆனந்த நிலை!

அன்புள்ள பிள்ளைகளே, இப்படி உங்கள் வாழ்க்-யின் ஒவ்வொரு வேலையிலும் உங்களுக்குள்ளே கேள்விகளைக் கேட்டு, ஏற்ற விடை பெற்று, அவ்-வண்ணம் நடப்பீர்களானால், நீங்கள் அடைவது ஆனந்த நிலையே !

---

21. கூட்டுறவு

1. "உலக மக்களோடு சேர்ந்து, நீ உலக வாழ்வில் கலந்துகொள் ; ஆனால், கடவுளிடத்தில் பற்றோடு நிற்பதை மறவாதே." —ஞானேஸ்வரர்

2. "வாழ்க்கை கூட்டுறவுக்கென உண்டானதே அன்றித் தனிமைக்கு அன்று." —வில்லியம் ஒட்ஸ்வோர்த்

மேற்கூறிய இரண்டு பெருமக்களின் அமுத மொழிகளிலிருந்து, 'கூட்டுறவு—மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து உறவாடல்—இறைவனது பெரு விருப்பம் ; அதற்கெனவே நாம் படைக்கப்பட்டுள்-ளோம்,' என்பன விளங்குகின்றன அல்லவா ?

உலகில் கூட்டுறவு இன்றி எக்காரியமும் நடை பெறாது. உலகில் புதிதாகப் பிறந்த குழந்தை தானே வளர முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள். அதற்-குத் தாயின் துணை இன்றியமையாதது அன்றோ? தாயைக் காக்கத் தந்தை அவசியம் ; தந்தையைக் காக்கத் தொழிலவசியம். இப்படியே படிப்படியாகப் போனால், ஒருவர்க்கொருவர் இன்றியமையாத துணை-வராவர் என்பது பெறப்படுகிறதன்றோ ?

பெரும்பாலும் ஒவ்வொரு தந்தையரும் பகல் முழுவதும் வேலை செய்து, மாலையில் களைத்து வீடு

திரும்புதல் யாவரும் அறிந்ததே. அத்தந்தையர், தம் களைப்பைப் போக்கப் பிறரது உதவியை அல்லது கூட்டுறவை நாடுதல் இயல்பே. அவர் வீடு வந்ததும், மக்கள் அவரைப் புன்முறுவலோடு வரவேற்கின்றார்கள். மக்கள் இல்லாவிட்டால் மனைவியோ, பிறரோ அவரை வரவேற்கின்றனர். ஆகையால், அவரதுகளைப்புற்ற முகம் களி கொள்கின்றது. வேலையில் உண்டான இன்ப துன்பங்களைத் தம் வீட்டார்க்கு உரைத்து, இன்பமோ துன்பமோ அடைதல் மனிதர் இயற்கை ஆகின்றது. இவ்வாறே மாணவ மாணவிகளும் தங்களுடன் படிக்கும் பிள்ளைகளோடு கூடிக் குலாவுதல் இயற்கையாக அமைந்துள்ளது.

கூட்டுறவால் மக்கள் ஒருவருக்கொருவர் சந்தேகமுள்ள விஷயங்களைப் பற்றிக் கேட்டறிந்து கொள்கிறார்கள்; உதவி செய்கின்றார்கள்; ஒருவர் குற்றங்களை ஒருவர் மன்னித்துவிடுகின்றனர்; ஒருவரை ஒருவர் முன்னேற்ற முயல்கின்றனர். சுருங்கக் கூறின், கூட்டுறவால் அளவிடற்கரிய நன்மைகள் பெற இடமுண்டு.

இத்தகைய கூட்டுறவில் ஏழை, செல்வந்தன், கற்றவன், கல்லாதவன் என்ற வேறுபாடுகளைக் கவனித்தல் தவறு. செல்வன் ஏழையை நல்ல நிலைக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவன். கற்றவன் கல்லாதவனை மேல் நிலைக்குக் கொண்டுவரக் கடமைப் பட்டவன். ஓரே நாட்டில் ஏழை என்றோ, செல்வன் என்றோ, கற்றவன் என்றோ, கல்லாதவன் என்றோ, வேறுபாடுகளை உண்டாக்கிச் செல்வர் செல்வருடனும் கற்றோர் கற்றோருடனும் கூட்டுறவு கொள்வாரேயானால்

அதே நாட்டு ஏழைகள் கல்லாதவர்கள் இவர்களின் கதி யாதாகும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்! இந்த வேறுபட்ட உணர்ச்சிகள் சமூகத்தில் இருந்தால், அதைச் சமூகம் என்று சொல்ல நாவெழுமா? 'நாங்கள் ஒரே நாட்டவர்கள்,' என்று கூறத்தான் மனம் துணியுமா? ஒருவரை யொருவர் பகைவராகக் கருதி அழிவரேயன்றி, இவர்களால் சமூகமோ, நாடோ, மக்களோ முன்னேற்றம் பெற முடியாது!

ஆதலின், கூட்டுறவு என்பது உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையின்றி, மக்கள் ஒன்றுபட்டுக் கலந்து வாழ்தல் எனப்படும். களங்கமற்ற மனமே இதற்கு வேண்டும். எம்மதத்தினர் ஆயினும், எச்சமயத்தவர் ஆயினும், எச்சாதியினர் ஆயினும், எம்மொழியைப் பேசுபவர் ஆயினும், எந்நிறத்தாராயினும், சிறிதும் வேறுபாடின்றி மனம் மொழி மெய்களால் கலந்து மகிழ்தலே கூட்டுறவு எனப்படும். இக்கூட்டுறவால், நிறவேற்றுமை, தொழில் வேற்றுமை, சாதி வேற்றுமை, மத வேற்றுமை முதலான கொடுமைகள் ஒழிந்து, ஒரு நாட்டில் உள்ள பல வகைப்பட்ட மக்கள் ஒரு தாயீன்ற புதல்வர்களைப் போலச் சுகமுற்றுச் சமத்துவத்துடன் வாழ இயலும். மக்கள் சமத்துவத்தால் ஒற்றுமை ஏற்படும். ஒற்றுமையால் வலிமை பெருகும்; அந்நிலையில் நாடு மிக உயர்ந்த நிலையை அடையும்.

மேல் நாடுகள் ஓரளவேனும் உயர்ந்த நிலையில் இருப்பதால், அவை செல்வத்திலும் ஒற்றுமையிலும் சிறந்தவைகளாக இருக்கின்றன. ஆனால், நமது தாய் நாடான இந்தியா, கூட்டுறவினால் போதிய நன்மை

பெறவில்லை. எனினும், மக்கள் யாவரும் ஒன்றெனும் உணர்ச்சி மெல்ல மெல்ல நம் மக்கள் மனத்தில் பதிந்து வருதல் போற்றத் தக்கது. மக்கள் சமூகம் கூட்டுறவால் ஒன்று பட்டாற்றான், எளிய நிலையில் உள்ள நம் தாய் நாடு உயர்ந்த நிலையைப் பெற இயலும்.

---

22. உண்மையுடைமை

1. "உண்மையே கடவுள்." —காந்தியடிகள்

2. "உண்மையே யாவற்றையும் வெல்லும்."
—உபநிடதங்கள்

'உண்மையே மதம்; உண்மை உடையான் மதம் உடையான்; ஒழுக்கம் உடையான்,' என்று நம் இதிகாசங்கள் கூறுகின்றன. உலகில் உள்ள எல்லா மதங்களும், 'உண்மையே உயிர்நாடி,' என முழங்குகின்றன. ஆகவே, உண்மையுடைமை என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத சிறந்த அணி என்பது தெளிவாகத் தெரிகின்றதன்றோ?

உலகில் ஒருவரையொருவர் விரும்புவதும், ஒருவரோடு ஒருவர் கூடி வாழ்வதும் உண்மை உடைமையாலேயே ஆகும். உண்மை இல்லாவிட்டால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகாது; ஒருவரையொருவர் நம்பார்; உயர்ந்த நோக்கங்கள், எண்ணங்கள், ஒழுக்கம் இவை நசித்துப்போம்; முதலாளி தொழிலாளியை நம்ப முடியாது; தொழிலாளி முதலாளியை நம்ப முடியாது. அரசன் தன் உத்தியோகஸ்தரையும் குடிகளையும் நம்ப இயலாது; உத்தியோகஸ்தரும் குடிகளும் வேந்தனை

நம்ப இயலாது. ஆகையால், உண்மை இல்லாவிட்டால், மக்கள் சமூகம் எப்படிப்பட்ட தாழ்ந்த நிலையை அடையும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

பொய்யுரைப்பவன் பொய்யான—சீர்கேடான—வழியிலேயே நடக்கத்தலைப்படுவான். தொழிலாளியோ, முதலாளியோ, அரசனோ, உத்தியோகஸ்தனோ, குடியானவனோ பொய்யனாக இருந்தால், அவன் எப்படிப்பட்ட தீய காரியத்தையும் செய்யப் பின் வாங்கான்; தீய எண்ணங்கள், தீய செயல்கள் இவற்றில் ஈடுபட்டு, இயற்கையாய் அமைந்த அன்பு உடலை மாற்றித் தீய—பயங்கர—உடலையும் முகத் தோற்றத்தையும் அடைகின்றான். ஐயோ! இப்படிப்பட்ட ஒருவனால் அவன் குடும்பமோ, சமூகமோ, நாடோ எவ்வளவு சீர்கேடான நிலையை அடையும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அரசன் தன்னை இரட்சகனாகக் கருதியுள்ள குடிகளுக்கு உண்மையுள்ளவனாக நடந்துகொள்ளல் வேண்டும். முதலாளி தன்னை நம்பி வேலை செய்யும் ஏழைத் தொழிலாளனிடம் உண்மை உடையவனாய் இருத்தல் வேண்டும். ஆசிரியன் தன்னை நம்பியுள்ள பிள்ளைகட்கு உண்மையுள்ளவனாய் இருத்தல் வேண்டும். இங்ஙனமே மக்கள் ஒருவரையொருவர் நம்பி இருத்தலால், ஒருவர்க்கு ஒருவர் உண்மையுடையராய் இருத்தல் வேண்டும்.

ஒரு காட்டில் ஒரு நாள் இடைச் சிறுவன் ஒருவன் சில ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தான். அப்போது அந்நாட்டு அரசன் குதிரைமீது ஏறி அங்கு வந்தான். அவன் தாகத்தால் வருந்திக் களைப்புற்று

இருந்ததால், சிறுவனை நோக்கி, "தம்பீ, இங்குத் தண்ணீர் கிடைக்குமா?" என்றான். சிறுவன், "ஐயா, இந்தப் பாதை வழியே சென்றால், ஒரு குளம் இருக்கக் காணலாம்; அங்கு உமது தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம்," என்றான்.

அரசன், "சிறுவனே, நான் இவ்வூருக்குப் புதியவன். எனக்கு நீ சொன்ன வழியே செல்வது கடினமாகும். நான் உன் ஆடுகளைப் பார்த்துக்கொள்கிறேன்; நீ சென்று தண்ணீர் கொண்டுவா," என்றான்.

அதைக் கேட்ட சிறுவன், "ஐயா, நன்று சொன்னீர்! நீரோ, புதிய மனிதர். உம்மை நம்பி என் ஆடுகளை விடலாமா? ஓநாய் வந்து ஆட்டைத் திருடிக்கொண்டு செல்லுமே! நான் போக முடியாது," என்றான்.

அரசன், "பையா, நான் மிக்க ஜாக்கிரதையுடன் ஆடுகளைப் பார்த்துக்கொள்கிறேன். நீ சென்று வா," என்றான். சிறுவன், "ஐயா, உம்மை நான் எப்படி நம்ப முடியும்? என் எசமானர் என்னை நம்பித் தம் ஆடுகளை என்னிடம் ஒப்புவித்து இருக்கிறார். அவருக்கு நானும் உண்மையுள்ளவனாக இருத்தல் அவசியம் அல்லவா? உம்மை நம்பி நான் விட்டுச் செல்ல, நீர் இன்னொருவனை நம்பி இவ்வாடுகளை விட்டுச் செல்வீர் அல்லவா? இஃது இயலாத காரியம். நான் போக முடியாது. உமக்கு நான் உதவிபுரிய விரும்புகிறேன். என்றாலும், இப்போது அப்படிச் செய்ய முடியாது," என்று உறுதியாகக் கூறினான்.

சிறுவனது சிறந்த குணத்தைக் கண்ட வேந்தன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அச்சமயம் அவன்

பரிவாரங்கள் அவ்விடம் வந்தன. பரிவாரங்களைக் கண்ட இடைச் சிறுவன், "ஓ! இவர் அரசர் போலும்! ஆயினும் என்ன? நாம் நியாயமென உணர்ந்ததையே கூறினேம்," எனத் தனக்குள் கூறிக்கொண்டான்.

வேந்தன், சிறுவனை அன்புடன் நோக்கி, "சிறு-வனே, நீ மிகவும் நல்லவன்; உண்மையுடையவன். உன்னைப்போன்ற உத்தமன் ஒருவனையே நான் தேடிக்-கொண்டிருந்தேன். நீ என்னுடன் இருக்க விரும்பு-கின்றாயா?" என்றான்.

சிறுவன், "அரசரே, என் எசமானர் என்னைத் தங்களிடம் இருக்க அனுப்பினால், எனக்குத் தங்களி-டம் இருக்கச் சம்மதமே," என்றான்.

அரசன் சிறுவனுடைய எசமானனைக் கண்டு, தன் விருப்பத்தைக் கூறினான். அவனும் அதற்கு உடன்-பட்டான். இடைச் சிறுவன் அரண்மனையை அடைந்து, அரசன் ஆதரவில் கல்வி கற்று, அரசனது அன்புக்குப் பாத்திரனானான்.

---

23. சுய நலம் கருதேல்

1. "சுய நலம் இல்லாதவனே நாட்டுச் சேவை செய்யத் தகுந்தவன்." —காந்தியடிகள்
2. "சுய நலம் உள்ளவன் மனிதன் ஆகான். அவனால் சமூகத்துக்குப் பெருத்த கேடு விளையும்." —முசோலினி

சுய நலம் என்பது ஒருவன் தன் நலத்தைப்பற்-றியே மிகுதியும் கவலைப்படுதல் என்பதாம். அவன் தன் நலத்தைப்பெரிதாகக் கருதுங்கால் பிறர் நலத்தைப்

பெரிதெனக் கருதான். எனவே, அவனிடம் இரக்கம், உதவி புரிதல், வீரம் முதலிய சிறந்த குணங்கள் இரா. இத்தகைய மனிதன்—உயர்ந்த குணங்கள் இல்லாத மனிதன்—இவ்வுலகில் இருந்து பயன் யாது? தன் நலத்தையே பெரிதெனக் கருதும் அவன் இருந்தும் இறந்தவனே ஆகின்றான் அல்லனோ?

சுய நலம் அற்று உயிர்களுக்கு உதவி புரிவதே தனது சிறந்த கடமை என்பதை உணர்ந்து நடப்பவனே 'சுயநலம் இல்லாச் சுத்த வீரன்,' என்று யாவராலும் கொண்டாடப்படுவான். அவன் போன்ற வீரர்களைப் பெறும் நாடே மேனிலையை அடையும். கேவலம் பட்டங்களையோ பதவிகளையோ பெறுவதற்கெனப் பிறர் நலத்தைக் கருதாது, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களால் நாடு எத்துணையும் நன்மை பெறாது. இத்தகையோர் தந்நலம் உடைய மக்களே ஆவார்கள்.

ஒவ்வொரு நாட்டுச் சரித்திரத்தையும் புரட்டிப் பார்த்தால், தந்நலமில்லாத் தியாக வீரர்களின் வீர வரலாறுகள் காணப்படுகின்றன. அவ்வீரர்களின் அரிய தியாகங்களாலேதான் சரித்திரமே உண்டாயிற்றென்று கூறலாம். அத்தகைய வீரர்களுள் ஒரு சிலர் வரலாறுகளை ஈண்டுக் காண்போம்:

i. பாபர்

கி. பி. 1526-ல் இந்தியாவில் மொகலாய ராச்சியத்தை ஏற்படுத்தி ஆண்டவர் பாபர் என்னும் சக்கரவர்த்தியாராவர். அவர் குடிகளிடம் பேரன்பு கொண்டவர். எனினும், அவரைக் கொலை செய்ய ஒரு சில இராஜபுத்திரர்கள் தருணம் பார்த்திருந்தார்கள்.

ஒரு நாள் மாலை டில்லி நகரின் தெரு வழியே வெறி கொண்ட யானையொன்று பிளிறிக்கொண்டே ஓடி வந்தது. தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள், பயந்து பல பக்கங்களிலும் ஓடினார்கள். அவ்வமயம் மூன்று வயதுடைய சிறுவன் ஒருவன் தெருவின் நடுவில் நின்று யானை வருவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறுவன் பயமறியாமல் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட ஜனங்கள் பயந்து அலறினார்கள். எனினும், ஒருவரேனும் போய் அச்சிறுவனைக் காக்கத் துணிந்திலர்.

யானை வெகு வேகமாக வந்துகொண்டிருந்தது. சிறுவன் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. 'இரண்டொரு நிமிடங்களில் சிறுவன் யானையின் கால்களில் அகப்பட்டு இறப்பது நிச்சயம்,' என்று அங்கிருந்த யாவரும் கண்ணீர் விட்டுக் கதறினர். யானையும் சிறுவனை நெருங்கிவிட்டது. ஆ! சிறுவன் கதி யாதாயிற்று?

யானை சிறுவனை நெருங்கும் சமயத்தில் கூட்டத்துள் இருந்த வீரர் ஒருவர் தெருவின் நடுவிற் பாய்ந்தார்; சிறுவனைத் தூக்கிக்கொண்டு தெருவின் ஓரத்தை அடைந்தார். யானை வீரரைக் கடந்து சென்றது. சிறிது தாமதித்திருப்பின், வீரரும் சிறுவனும் யானைக் கால்களின் அடியில் நசுக்குண்டு இறந்திருப்பார்கள்.

"இத்தகைய நெருக்கடியான நிலையில் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் ஓடிச் சிறுவனைக்காத்த பெருந்தகை யாவர்? அவரைக் காண்போம்," எனக் கூறி, ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். யாவரும் அவ்வீரரை மனமாரப் புகழ்ந்தனர்.

அவ்வேளை அவ்வீரரது தலைப்பாகை நழுவிக் கீழே விழுந்தது. அப்போது அவர் முகத்தைக் கண்டவர் திடுக்கிட்டனர். ஏன்? அவ்வீரர், பாபர் சக்கரவர்த்தியாரே.

ஆ! அப்போது ஜனங்கள் கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகிற்று. 'என்னே நம் அரசர் பெருமான் சுய நலம் இல்லாத தன்மை இருந்தவாறு! தம் ஆருயிரைப் பெரிதெனக் கருதாமல், இச்சிறுவனை மிகச் சங்கடமான சந்தர்ப்பத்தில் காத்த இவரது வீரச் செயலை என்னென்பது! தந்நலங் கருதாத இப்பெரியாரைச் சக்கரவர்த்தியாராகப் பெற்ற நாம் புண்ணியம் செய்தவரே ஆவோம்,' என்று எண்ணி எண்ணிக் களித்தனர். பின்னர், யாவரும், "பாபர் சக்கரவர்த்தியார் நீடூழி வாழ்க!" என்று வாழ்த்திக் கர கோஷம் செய்தனர்.

பாபரிடம் வெறுப்பும் பொறாமையும் கொண்டிருந்த இராஜபுத்திரர்கள் இவ்வீரச் செயலைக் கேள்வியுற்ற பின்பு தங்கள் தீய எண்ணத்தை விட்டொழிந்து, அவருடன் நட்புக் கொண்டனர்.

பிள்ளைகளே, பாராளும் வேந்தனது தாராள மனப் போக்கைப் பார்த்தீர்களா! இத்தகையோரே 'தமக்கென வாழாப் பிறர்க்குறியாளர்,' எனப்படுவர். இப்படிப்பட்ட தியாக புருஷர்களாலேதான் உலகம் ஓரளவேனும் நன்னெறியில் நடக்கின்றதென்னலாம்.

ii. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்பவள் ஆங்கில நாட்டுப்பெண்மணி. அவள் இளவயது முதற்கொண்டே உயிர்களிடத்தில் அன்பு மிக்கவள். அவள் இருந்த

ஊரின் சுற்றுப் புறத்தில் இருந்த எல்லா உயிர்களும் அவளை நேசித்தன என்று கூறுதல் மிகை ஆகாது.

அவள் ஊரின் வெளிப்புறத்தில் இடையன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தான். அவன் ஒரு வேட்டை நாயை வளர்த்து வந்தான். அந்நாய் அவனது ஆட்டு மந்தையைக் காத்து வந்தது. ஒரு நாள் ஒருவன் அந்நாயைக் கல்லால் அடிக்க அது, தன் முன்னங்கால் ஒன்றில் காயம் பட்டு வருந்தியது.

அந்நிகழ்ச்சிக்கு மறுநாள் நைட்டிங்கேல் தன் நண்பன் ஒருவனுடன் ஊரின் வெளிப் புறத்துக்குச் சென்றாள்; அப்போது அங்கு நின்றிருந்த இடையனைக் கண்டாள். "ஐயா, உனது அருமை நாய் எங்கே?" என்றாள். அவன், ஓ! அதுவா! இனி அஃது இறக்க வேண்டுவதே. அதனால் இனிப் பயனில்லை,' என்று வருத்தத்தோடு கூறினாள்.

அதைக் கேட்ட சிறுமி, "என்ன! அதனாற் பயனில்லையா? என்ன செய்தி?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

இடையன், "ஆம், இனி அதனாற் பயனில்லை என்று மீண்டும் கூறுகிறேன். அதன் காலில் பலமான காயம் பட்டிருக்கின்றது. அது நடக்கவும் சக்தியின்றிக் குடிசையிலேயே விழுந்து கிடக்கிறது," என்று கூறினான்.

உடனே நைட்டிங்கேல் கண்களில் நீர் ததும்ப, இடையன் குடிசையை அடைந்தாள்; நாயைக் கண்டாள். நாய் அவளைக் கண்டதும், வாலைக் குழைத்து ஆட்டி, அன்போடு அவள் முகத்தை நோக்கிற்று.

நைட்டிங்கேல் அதன் காயம் பட்ட காலைப் பரிசோதித்தாள். அவளுடன் சென்ற நண்பன் அடுப்புப் பற்ற வைத்துச் சிறிது நீரைக் கொதிக்க வைத்தாள். நைட்டிங்கேல் காயம் பட்ட இடத்தை வெந்நீரால் கழுவி, நன்றாக வேது கொடுத்தாள். அப்போது நாய் அவள் கைகளை நக்கி, வாலை ஆட்டியது. தன் பணியினால் நாயின் துன்பம் சிறிது நீங்கியதென்பதை நைட்டிங்கேல் உணர்ந்து மகிழ்ந்தாள்.

இங்ஙனம் நைட்டிங்கேல் நான்கைந்து நாட்கள் இடையன் குடிசைக்குச் சென்று, நாய்க்குத் தொண்டு செய்துவந்தாள். அதனால், நாயின்கால் பழைய நிலையை அடைந்து, நாய் முன்போல நடக்க ஆரம்பித்தது. அதைக் கண்ட நைட்டிங்கேல் மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். இடையன் அவளைப் புகழ்ந்தான் என்று கூறவும் வேண்டுமோ?

இவ்வாறு, காருண்யமே உருக்கொண்டு வந்த நைட்டிங்கேல் தன் ஆயுள் இருந்தவரையில் ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் சேவை செய்து வந்தாள். அவள் தன்னைப்பற்றிக் கவலை கொள்ளச் சிறிது நேரத்தையும் பெறாமல், எப்பொழுதும் பிறர் நலத்துக்கே உழைத்து வந்தாள்.

ஒரு சமயம் போரில் காயம் பட்ட பதினாயிரம் வீரர்களுக்கு அவள் தொண்டு செய்ய நேர்ந்தது. அவ்வேளையில் அவள் சிறிதும் மனம் சலியாமல், தனது உடல் நலத்தைச் சிறிதும் கவனியாமல், பரிதாப நிலையில் இருந்த அவ்வீரர்கள் நடுவிலேயே இருந்து, சேவை செய்து வந்தாள்; இங்கிலாந்திலிருந்த வைத்-

திய சாலைகளை எல்லாம் செம்மை செய்தாள்; நோயாளிகளைப் பார்வையிட்டு, அவர்கள் நலத்துக்குப் பெரிதும் உழைத்தாள்.

அத்தகைய மாதரசியையும் அவள் போன்றாரையும் பெற்றதால் அன்றோ, இங்கிலாந்து வீரர் வாழும் நாடாக விளங்குகின்றது! உலகத்தில் மூன்றில் ஒரு பாகத்தைக் கட்டியாள்கின்றது!!

பிள்ளைகளே, பாபரைப் போன்றோ, நைட்டிங்கேலைப் போன்றோ தோன்றும் தியாகிகளாலேதான் நாடு நன்னிலையைப் பெறும். இந்தத் தியாக புத்தி உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்தும் விளங்குமாயின், நம் தாய் நாடு எவ்வளவு உயர்ந்த நிலையை அடையும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

24. வீரம்

1. "வீரம் இல்லாதவன் மனிதன் ஆகான்."
—நெப்போலியன்

2. "வீரம் இல்லாத மக்களைப் பெற்ற நாடு அடிமை நாடாகவே இருக்கும்."
—முசோலினி

வீரம் என்பது ஒவ்வோர் ஆண் மகனுக்கும் உள்ள உயர்ந்த குணங்களுள் ஒன்றாகும். அஞ்சாமையினின்றும் தோன்றுவது வீரமாகும். வீரத்தைப் பெறுபவன் வீரன் எனப்படுவான். ஒருவன் எத்தகைய ஆபத்துக்கும் அஞ்சாமல், தனது நாட்டுக்கோ, சமூகத்துக்கோ, குடும்பத்துக்கோ அரிய சேவை செய்வது வீரமாம். அப்படிப்பட்ட வீரத்தைப் பெறாத மக்களைக் கொண்ட நாடு எக்காலத்திலும் உயர் நிலையை அடைய முடியாது.

ஐரோப்பாவையே நடுநடுங்க வைத்த நெப்போலியன் என்னும் பிரஞ்சு நாட்டுச் சக்கரவர்த்தியார் சிறந்த வீரர் ஆவர். ரோம ராச்சியத்தைப் பரப்பிய ஜூலியஸ் சீஸர் என்பவர் உண்மை வீரரே. இந்தியாவின்மீது படையெடுத்து வந்த அலெக்ஸாண்டர் என்னும் கிரேக்க அரசர் மகா வீரர். சுதந்தரத்தின் பொருட்டுத் தம் உயிரையும் இழக்கத் துணிந்து போர் செய்து ஆங்கிலேயரிடமிருந்து அமெரிக்காவை மீட்ட ஜார்ஜ் வாஷிங்டன் உண்மை வீரர் எனப்படுவார். சீர் குலைந்த நிலையில் இருந்த இத்தாலியைக் கைப்பற்றி, அதனை உயர்ந்த நாடாக்கி வரும் ஸிஞோர் பெனிட்டோ முசோலினி மகா வீரரே.

நமது தாய் நாட்டில் இருந்த அரசர்களுட் பெரும்பாலார் சிறந்த வீரராகவே இருந்தனர். வட இந்தியாவை ஆண்டிருந்த சந்திர குப்தர், சமுத்ர குப்தர், ஹர்ஷவர்த்தனர், தென்னிந்தியாவை ஆண்டிருந்த இரண்டாம் புலிகேசி, நரசிங்கப் போத்தரையர், சோழன் கரிகாலன், சோழன் முதற் குலோத்துங்கன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன் முதலான அரசர் பெருமக்கள் மேல் நாட்டு வீரர்களுக்கு எத்துணையும் பின் வாங்காதவர்களே.

இவர்களே அன்றி, போர்களில் ஈடுபட்டுள்ள சிப்பாய்களில் பலர் உண்மை வீரர்களாக இருந்திருக்கிறார்கள். இவ்வீரர்களாற்றான் மேற் கூறப்பெற்ற முடிமன்னர்கள் வெற்றி அடைந்தார்கள். இவ்வீர புருஷர்கள் இல்லாவிட்டால், நெப்போலியனோ, பிறரோ உலகில் சிறந்திருக்க இயலாது. படைத்துணை இன்றி எந்த

நெப்போலியன்றான் என்ன செய்ய இயலும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஒரு முறை நெப்போலியன் படையொன்று ஜர்மனியர் பட்டண மொன்றை முற்றுகையிட்டிருந்தது. அப்படைக்கு ஒரு மைல் தூரத்தில் இருந்த சிறிய குன்றின் மீது மகா வீரரான நெப்போலியன், தம் படையாற்றலைக் கண்ட வண்ணம் நின்றுகொண்டிருந்தார். அவர் தம் கைகளைப் பின்னே கட்டிக்கொண்டும் கழுத்தை முன்னே நீட்டிக்கொண்டும் தம் படையைக் கண்ணுற்றபடி நின்றிருந்த காட்சி, அவர் ஓர் உண்மை வீரர் என்பதைக் காட்டிற்று.

சிறிது நேரத்திற்குப் பின் நெப்போலியன் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. எங்கும் புகை சூழ்ந்தது. அந்நிலையில் திடீரென அப்புகைத் திரளின் நடுவிலிருந்து ஒரு குதிரை வீரன் வெளித் தோன்றினான். அவன் நெப்போலியன் நின்றுகொண்டிருந்த குன்றினை நோக்கி மிக்க வேகத்தோடு குதிரைமீது வந்துகொண்டிருந்தான்.

அக்குதிரை வீரன் விரைவில் நெப்போலியனை அடைந்தான். அவன் நெப்போலியன் படையில் ஒரு சிறிய உத்தியோகஸ்தன்; இளைஞன். அவன் தனது குதிரையை விட்டிறங்கித் தனது தொப்பியை எடுத்து நெப்போலியனுக்கு மரியாதை செய்தான். "பட்டணத்தை நாம் பிடித்துவிட்டோம், சக்கரவர்த்தியே!" என்று கூவினான்; "நமது படை பட்டணத்துள் நுழைந்துவிட்டது; நகரப் பொதுவிடத்தில் நான் நமது கொடியைப் பறக்கவிட்டு வந்திருக்கிறேன். நம் படை

அதிகாரிகள் தங்கள் வருகையை எதிர் நோக்கி இருக்கிறார்கள்," என்று மீண்டும் அவ்வீரன் மிகுந்த களிப்புடன் கூறினன்.

நெப்போலியன் கண்கள், அச்சந்தோஷச் செய்தி கேட்டு, ஒளி விட்டுப் பிரகாசித்தன. அவர் அந்நற்செய்தியைக் கொணர்ந்த வீரனை நோக்கினர்; வீரனுடைய உதடுகள் இறுகச் சேர்வதையும் முகம் வெளுப்பதையும் கண்டார். நெப்போலியன் மீண்டும் மீண்டும் அவ்வீரனை உற்று நோக்கினர்; வீரனது மார்பிற் பட்ட புண்ணிலிருந்து இரத்தம் வெளி வருவதைக் கண்டார்.

"சிறுவனே, நீ மார்பிற் காயம் பட்டனையோ!" என்று அன்போடு நெப்போலியன் வீரனைக் கேட்டார். வீரன், "இல்லை" என்றான். அப்போது அவன் முகம் மாசில்லாச் சுத்த வீரனது முகம் போலப் பிரகாசித்தது. தன் கடமையைச் செய்து விட்டதாக நினைந்து அவன் களிப்புக் கொண்டான். அவன் மீண்டும், "இல்லை; சக்கரவர்த்தியே, நான் கொல்லப்பட்டேன்!" என்று புன்சிரிப்போடு கூறிக்கொண்டே நெப்போலியன் பாதங்களில் வீழ்ந்து உயிர் விட்டான்.

அன்புள்ள சிறுவர்களே, இவ்வீரனது அரிய வீரச் செயலைப் பார்த்தீர்களா! கைப்பற்றிய பட்டணத்தின் நடுவில் தங்கள் கொடியைப் பறக்கவிட்டு, உயிர் விடுந் தறுவாயிலும் தனது துன்பத்தைப் பொருட் படுத்தாமல், குதிரைமீது விரைந்து வந்து, தன் சக்கரவர்த்திக்கு நற்செய்தியைக் கூறித் தனது கடமையை நிறைவேற்றிய தன்மையை நினைந்து மகிழ்ந்து, மகா வீரரான

நெப்போலியன் பாதங்களில் வீழ்ந்து உயிர் விட்டனன் என்றால், இவ்வீரனது வீரத்தை என்னெனப் புகழ்வது! இத்தகைய வீரர்களைப் பெற்றுள்ளதால் அன்றோ, கேவலம் நான்கு கோடி ஜனத்தொகை கொண்ட பிரஞ்சு நாடு இன்றைய உலகில் பலம் பொருந்திய வல்லரசாக விளங்குகின்றது! இதனுடன், சுமார் முப்பத்தாறு கோடி ஜனத் தொகையுடைய நமது தாய் நாட்டை இப்போது எந்நிலையில் ஒப்பிடுவதென்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். இளைஞர்களாகிய நீங்கள் வீரமுடையவர்களாய் இராவிட்டால், நமது நாட்டுக்குச் சிறப்பேது?

---

25. பெண்களுக்கு உழைக்கும் பெரியார்

நாட்டுப் பற்று மிகுந்து, ஏழைப் பெண்களையும் விதவைப் பெண்களையும் வரவேற்று, இலவசக் கல்வி உணவு உடை அளித்து, விதவை மணங்களைப் பெருக்கிப் பெண்களை உயர் நிலைக்குக் கொண்டுவர அரும்பாடு படுகிறவர் பேராசிரியர் டாண்டு கேசவ கார்வே (Dhondu Keshav Karve) என்பவர். இவரது அரிய வரலாற்றைப் பிள்ளைகளாகிய நீங்கள் ஊக்கத்துடன் படித்துணர வேண்டுவது அவசியமாகும்.

இப்பெரியார் பம்பாய்க்கு அருகில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் 1858-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆந் தேதி பிறந்தவர்; இளவயதில் கிராமப் பள்ளியில் தாய் மொழிக் கல்வி கற்றுத் தேறினர். ஆங்கிலம் கற்க வேண்டும் என்னும் பேரவா உண்டானதால், இவர். தம் கிரா-

மத்தில் இருந்த கனவான் ஒருவர் இல்லத்துக்கு வந்துகொண்டிருந்த ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் ஆங்கிலம் கற்ருர். பின்பு, இவர் இலவசமாக ஆங்கிலக் கலாசாலையிற் சேர விரும்பிப் பம்பாய் அடைந்தார்; அங்குள்ள கலாசாலை ஒன்றிற் சேர்ந்து 1881-ஆம் ஆண்டு மெட்றிகுலேஷன் பரீட்சையில் தேறிஞர் ; பின்பு கல்லூரியில் சேர்ந்தார். அப்போது, உணவுக்கும் உடைக்கும் இவர் பொருள் தேட நேர்ந்தது. அதனால், பல மாணவர்களுக்குக் காலை நேரத்தில் பாடம் கற்பித்துச் சிறிது பொருள் பெற்று வந்தார்; தரும சிந்தை கொண்ட பெருமக்கள் இல்லங்கட்குச் சென்று, இலவசமாக உண்டு வந்தார். இங்ஙனம், இவர் பல-வாறு துன்பமுற்று, முடிவில் பி. ஏ., பரீட்சையில் தேர்ச்சியுற்ருர்.

பட்டம் பெற்ற பின்பு, இவர் இரண்டொரு கலாசாலைகளில் ஆசிரியராக இருந்தார்; முடிவில் கோபால கிருஷ்ண கோகலேயின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பூனுவில் உள்ள பேர்கூசன் கலாசாலையில் கணித போதகாசிரியரானுர்; ஏறக்குறைய இருபதாண்-டுகள் அங்கிருந்து, அளவில்லாத புகழைப் பெற்று, 1914-ஆம் ஆண்டில் ஆசிரியர் வேலையினின்றும் விலகி-னுர்.

இவர் இளமையிலிருந்தே சீர்திருத்த நோக்கம் உடையவர்; தம் தங்கைக்கும் மனைவிக்கும் வீட்டிலேயே கல்வி கற்பித்து வந்தார்; தம் மூத்த மகனுக்குப் பூணூல் விவாகத்தைச் சுருக்கமாக நடத்தி விட்டு, மிஞ்-சிய இருநூறு ரூபாயைச் சீர்திருத்தத்துக்கென உழைக்-

கும் சங்கத்துக்கு உதவினார்; 1891-ல் தம் மனைவி மாண்டபோதும், மரணச் சடங்குகளைச் சுருக்கமாகச் செய்துவிட்டு, மிஞ்சிய ஐந்நூறு ரூபாயைத் தம் கிராமப் பெண்கள் கல்விக்கென அளித்துவிட்டார். தம் கிராமமான முரட்டில் இருந்த பெண்கள் கல்வி கற்று மேனிலை அடைய வேண்டுமென்பது இவரது பேரவா ஆகும். அதனால், இவர் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த அறிஞர்களை ஒன்று சேர்த்துப் பெருநிதி சேர்த்தார்; அந்நிதியைக்கொண்டு கிராமச் சீர்திருத்தத்திலும் பெண்கள் கல்வியிலும் தம் கவனத்தைச் செலுத்தினார்; ஒரு தாய் மொழிக் கலாசாலையை முரட்டில் ஏற்படுத்தினார்.

சீர்திருத்த நோக்கமுடைய இப்பெரியார், 1893-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ஆந் தேதி கோடு பாய் என்ற ஒரு விதவையை மணந்துகொண்டார். இச் செய்தியை அறிந்த இவர் கிராம வாசிகள் இவரைப் பலவாறு குறை கூறினார்கள்; எனினும், சில ஆண்டுகட்குப் பின்பு, அவர்களே இவரது விரிந்த நோக்கத்தை வியந்து கொண்டாடினார்கள். இரண்டாம் விவாகத்துக்குப் பின்பு, இவர் விதவைகள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தினார்; விதவா விவாக சங்கம் ஒன்றைத் தாபித்தார்; பின்பு, விதவைகள் விடுதி ஒன்றை அமைத்துக் கல்வி கைத்தொழில் முதலியவற்றில் அவர்களைப் பயலும்படி செய்ய விரும்பினார்; அதற்கெனத் தாம் முதலில் ஆயிரம் ரூபாய் அளித்தார்.

இவர் அதனுடன் நில்லாது, சுற்றிலுமுள்ள ஜில்லாக்களுக்குச் சென்று, தம் விருப்பத்தைப் பிரசங்க

வாயிலாகக் கூறிப் பொது மக்களிடமிருந்து பொருள் பெற்றார்; ஏறக்குறைய மூவாயிரத்து முந்நூறு ரூபாய் சேர்த்தார் ; விதவைகளுக்கென விடுதி ஒன்றையும் அமைத்தார். விதவைகள் சிலர் அவ்விடுதியில் கல்வி கற்கலாயினர். கற்றுத் தேறிய பெண்மணிகள் ஆசிரியர்களாக நியமிக்கப் பெற்றார்கள். பெண்களுக்குப் புத்தகக் கல்வியோடு சமையல் செய்தல், பின்னல் வேலை, தையல் வேலை, நெசவு வேலை முதலியனவும் கற்பிக்கப்பட்டன. கற்றறிந்த பேரறிஞர் பலர் கார்வே செய்யும் பெருந்தொண்டையும், அதனால் விதவைப் பெண்கள் முன்னேற்றம் அடைதலையும் கண்டு, விதவைகள் விடுதிக்குப் பொருள் உதவி செய்தனர்.

பல பெண்கள் கார்வேயினால் முன்னேற்றமடைவதைக் கண்ட பலர், தம் சிறு பெண்களையும் இவர் ஆதரவில் வைத்துக் கல்வி கற்பிக்குமாறு வேண்டினர். அவர்கள் விருப்பத்துக்கு இணங்கிய கார்வே, முதலில் புதிய பெண்களுக்கென விடுதி (Hostel) ஒன்றை அமைத்தார் ; அவ்விடுதியில் தம் மேல் பார்வையில் இருந்துகொண்டு, புதிய பெண்கள் வேறு கலாசாலைகளில் கல்வி கற்குமாறு ஏற்பாடு செய்தார் : பின்பு, விடுதிக்குள்ளேயே ஆரம்ப வகுப்புகளை ஏற்படுத்தினார். நாளடைவில் அச்சிறிய கலாசாலை பெரிய கலாசாலையாக மாறியது. அதற்கு மகிலா வித்யாலயம் என்பது பெயர்.

வித்யாலயத்தை விருத்தியாக்கப் போதிய பொருள் இல்லாமையால், கார்வே ஒரு சங்கத்தைத் தாபித்தார் ; அதில் சேருவோர் தமது உணவுக்கும் உடைக்-

கும் பிறவற்றுக்கும் வேண்டிய பொருளைத் தவிர மிஞ்சியதை மகிலா வித்யாலயத்துக்கு அளிக்கவேண்டும் என்று அறிவித்தார். அறிவித்து, முதலில் இவரே தம் பொருள் அனைத்தையும் அக்கலாசாலைக்கு உதவினார். இவரது தியாக சிந்தையைக் கண்டு வியந்த பெருமக்களில் சிலர் இவரது சங்கத்தில் அங்கத்தினராயினர். விதவா விடுதியில் படித்து வந்த பெண்டிர் சிலரும் சேர்ந்தனர்.

கையில் சிறிது பொருளை வைத்துக்கொண்டு இச்சங்கத்தார் நாற்பதாயிரம் ரூபாயில் ஒரு பெரிய கலாசாலையைக் கட்டத் தொடங்கினர்; பின்பு அங்கத்தினர் ஒவ்வொருவரும் கடன் வாங்கியும் உதவி புரிந்தனர். வாடியா என்னும் செல்வச் சீமானின் ஆஸ்தியை நிர்வகித்து வரும் பெருமக்கள் பெருவாரியாக இக்கட்டடம் கட்டப் பொருளுதவி செய்தனர். இங்ஙனம் பலர் உதவியைக் கொண்டு கலாசாலை கட்டப்பட்டது. பின்பு, கார்வே, விதவைகள் விடுதியையும், இக்கலாசாலையையும், சங்கத்தையும் ஒரு நிருவாகத்தின் கீழ் அமைத்து, மகிலாஸ்ரமம் என்று பெயரிட்டனர்.

இவ்வேலைகளுடன் இப்பெரியார் நின்றுவிடவில்லை; பெண்கள் சர்வ கலாசாலை ஒன்றைத் தாபித்துப் பெண்களை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினார். அதற்காக இவர் இந்தியா முழுவதும் பிரயாணஞ் செய்து, பெரும் பொருளைத் திரட்டினார்; 1916-ஆம் ஆண்டு பெண்கள் சர்வ கலாசாலை ஒன்றைப் பூனாவில் தாபித்தார். பல பெருமக்கள் இவர் சலியா ஊக்கத்தையும் உழைப்பையுங்

கண்டு போற்றிப் பொருள் உதவி செய்தனர். சர். விதல் தாஸ் டி. தாக்கர்சி என்னும் கனவான் மேற்கூறிய சர்வ கலாசாலைக்கெனப் பதினைந்து லட்சம் ரூபாயை ஒதுக்கிவைத்து, அதன் வட்டியை (52,500 ரூபாய்) ஒவ்வோராண்டும் சர்வ கலாசாலைக்குக் கொடுத்து வந்தார்.

கார்வே, இப்பொருள் உதவியோடு நில்லாமல், உலகமெல்லாஞ் சுற்றிப் பெரும்பொருள் திரட்டினர். இன்று இச்சர்வ கலாசாலை மிகப் பெரிதாக விளங்கி வருகின்றது. பூனு, பம்பாய், பரோடா, அகமதாபாத்து என்னும் நான்கு நகரங்களில் நான்கு கல்லூரிகளும் (Colleges) ; ஹிங்கினி, பூனு, பம்பாய், சூரத்து, பரோடா, அகமதாபாத்து, இராஜ கோட்டை, பகவன் நகர், நாகபுரி, ஐதராபாத்து, சிந்து, மால்வன், பெல்காம், சங்கிலி, சதாரா என்னும் பதினைந்து நகரங்களில் பதினைந்து உயர்தரக் கலாசாலைகளும் (High Schools) ; ஷோலாப்பூர், இரத்தினகிரி, வாய் என்னும் மூன்று இடங்களில் மூன்று நடுத்தரக் கலாசாலைகளும் (Middle Schools); ஹிங்கினி என்னும் இடத்தில் போதனு முறைக் கல்லூரியும் (Training College) மேற்கூறப்பட்ட பெண்கள் சர்வ கலாசாலையின் சார்பாக நடந்து வருகின்றன.

இந்தியாவில் தமக்கு வயது வந்த நாள் முதல் பெண்கள் முன்னேற்றத்துக்கே தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அளித்து, இடைவிடா உழைப்பால் ஆயிரக்கணக்கான பெண்களுக்குக் கல்விச் செல்வத்தை அளித்து வரும் கார்வே என்னும் இப்பெரியார் ஒவ்-

வோர் இந்தியர் உள்ளத்திலும் இருக்கத் தக்கவராவர். இவரது சமூகச் சேவையைப் பாராட்டி அரசாங்கத்தார் கெய்சரி ஹிந்து வெள்ளிப் பதக்கத்தை இவருக்களித்தனர். இப்பெரியாருக்கு இப்பொழுது எழுபத்தாறு வயதாகின்றது. இம்முதுமைப் பருவத்திலும் இவர் பெண்கள் முன்னேற்றத்தில் பேரூக்கம் காட்டி வருகின்றனர். இவ்வுத்தமரைப் போல நம் தமிழ் நாட்டில் நாம் பாடு பட்டால், நம் தமிழ் நாட்டுப் பெண்கள் கல்விக்கு இருப்பிடமாவார்கள் என்பதில் ஐயம் உண்டோ ?

---

26. கலங்கா உள்ளம்

1. "உறுதியுடைய மனமே கலங்கா உள்ளம் எனப்படும்." —எமர்சன்
2. "வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றியடைவதற்கு உறுதியுடைய மனமே தேவையானது." —மார்டன்

வாழ்க்கையில் வெற்றியடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் கலங்கா உள்ளம் கொண்டவனுக இருத்தல் வேண்டும். இக்கலங்கா உள்ளம் ஒருவனது வாழ்க்கையில் பல உயர்ந்த மாறுதல்களைச் செய்துவிடுகின்றது. நினைத்தொரு நல்ல காரியத்தில் வெற்றி பெற விரும்புவோன், 'நான் எத்தகைய துன்பங்கள் நேரினும், இக்காரியத்தில் வெற்றி அடைந்தே தீருவேன் !' என்று முழு நம்பிக்கையோடு கூறி, முடிவில் வெற்றி பெறுவானுனுல், அவன் கலங்கா **உள்ளம்**

உடையவன் எனப்படுவான். இவ்வுலகில் இத்தகைய மன உறுதி கொண்ட மனிதர் பலர் இருந்தனர்; இப்பொழுதும் இருக்கின்றனர்.

இப்பொழுதிருக்கும் கலங்கா மனம் படைத்த பெரியார்களுள் ஒருவராயும் ஜெர்மனி தேசத்தின் சர்வாதிகாரியாயும் விளங்குபவரான ஹிட்லர் என்பாரது சிறந்த வரலாற்றைப் பின் காண்க: இவ்வரலாற்றிலிருந்து அப்பெரியார் மனவுறுதியால் எத்தகைய மேலான நிலை அடைந்துள்ளார் என்பது தெளிவாகும்.

ஹிட்லர் சாதாரண எளிய குடும்பத்திற் பிறந்தவர். இளவயதில் தம் தந்தையாரை இழந்ததால், அவர் தம் அருமைத் தாயாரைத் தெய்வமாகப் போற்றி, அவருக்கும் தமக்கும் வேண்டிய உணவுப் பொருள்களுக்காக வேலை செய்யலானார். பாவம்! சொற்பக் கல்வியறிவை உடைய அவர் முதலில் செங்கற்களை அறுக்கும் வேலையில் அமர்ந்தார்; பின்னர்ச் சித்திரங்கள் எழுதும் வேலையில் சிறிது காலம் இருந்தார். அவ்வேலையில் அவர் இருந்தபோது அவருடைய ஆருயிர் அன்னையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்தோ! ஏழை ஹிட்லர் ஈன்ற தாயாரையும் இழந்து திக்கற்றவர் ஆனார்.

1909-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஹிட்லர் வியன்னா நகரில் வேலையின்றித் தெருத் தெருவாக அலைந்தார். அவர் உடுத்திருந்த கிழிந்த அழுக்காடைகள் அவர் அநாதியென்பதைக் குறிப்பிட்டன. அந்நிலையில் அவரைக்கண்ட ஹனிச்சு என்பவர் அவரோடு நண்பரானார். ஹிட்லர் அந்நாள் முழுவதும் பட்டினியாக இருந்ததையறிந்த அவ்வேழை நண்பர் தம்மிடம்

இருந்த ரொட்டித் துண்டு ஒன்றைத் தந்து, அவர் பசியைத் தணித்தனர்.

பின்னர் இருவரும் மூட்டை தூக்குதல் முதலிய தாழ்ந்த வேலையில் ஈடுபட்டு வந்தனர். சிறிது காலத்திற்குப் பின் ஹிட்லர் தபால் கார்டுகளில் சித்திரம் வரைந்தார்; அவற்றை அவர் நண்பர் பல இடங்களில் விற்று வந்த பொருளைப்பெற்று இருவரும் காலங்கழித்தனர். அப்போதவர்கட்கு ஜீவனத்துக்கு மேற்பட்ட வருவாய் கிடைக்கலாயிற்று. ஹிட்லர் அந்நிலையில் பத்திரிகைகளை வாங்கிப் படித்துக்கொண்டே இருந்தார்; தம் நண்பரோடு அரசியல் சம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசித் தர்க்கம் செய்து வந்தார். அவ்வாறு நிகழ்ந்த தர்க்கமொன்றில் ஹிட்லர் தம் நண்பரைப் பார்த்து, "நண்பரே, நான் என் கொள்கைகள் நிறைந்த ஜெர்மனியை விரைவில் காண்பேன். நான் விரைவில் உயர்ந்த நிலையை அடைவேன். அஃது என்னால் முடியும்," என்று அழுத்தமுந் திருத்தமுமாகக் கூறினார். அப்பொழுது அவர் கண்கள் அவர் கூறியவற்றைச் செய்து முடிப்பன போல மலர்ந்து பிரகாசித்தன. அவரது முகம் மாசற்று மன உறுதி கொண்டவர் முகம்போல ஒளி வீசியது.

ஹிட்லர் கூறியவற்றைக் கேட்ட நண்பர் அவரது முகத்தை நோக்கினார்; 'இவர் கலங்கா உள்ளம் உடையவராகத் தோன்றுகிறார்,' என்று தமக்குள் நினைத்து, 'முயன்றால் முடியாததுண்டோ?' என்று நகைத்துக்கொண்டே கூறினார்.

எதனிலும் உள்ள குறைகளைக் காண்பதில் ஹிட்லர் சமர்த்தர். அப்போது இருந்த அரசியல் கட்சிகளின் கொள்கைகளுள் சில நாட்டு நன்மைக்குப் பாதகமானவையெனத் தோன்றின ஆதலால், ஹிட்லர் புதிய அரசியல் கட்சியொன்றை ஏற்படுத்த முயன்றார். அவர் அதற்கெனச் சிலவிடங்களில் சிறிய பிரசங்கங்கள் செய்தார். அப்பிரசங்கங்கள் ஒவ்வொன்றிலும் அவர் பேசுகையில் அவரது மனவுறுதியைக் கண்ட மக்கள், 'இவர் கலங்கா உள்ளம் படைத்தவர். இவர் எக்காரியத்திலும் விரைவில் வெற்றி பெறுவார்,' எனக் கூறி வியந்து அவர் இயக்கத்தில் சேர்ந்தனர்.

ஹிட்லர் சென்ற மகா யுத்தத்தின் போது, ஜெர்மானியர் படையில் சாதாரண வீரராகச் சேர்ந்தார்; ஆனால், போர் முடிந்தபோது பெரிய புகழுடன் வெளி வந்தார். அவர் போரில் செய்த வீரச் செயல்களைப் பல பத்திரிகைகள் புகழ்ந்து பாராட்டின. அப்பொழுதுதான் ஹிட்லரைப்பற்றி உலகம் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்தது.

1920-ஆம் ஆண்டிலிருந்து அவரது கட்சி வன்மை பெறத் தொடங்கிற்று. உலகப் போரில் பெரு நஷ்டம் அடைந்த ஜெர்மனியைத் தன் பழைய நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே ஹிட்லரது சிறந்த நோக்கம். அதற்குத் தாமே அரசியலை ஏற்கவேண்டும் என்று அவர் உறுதிகொண்டார். அந்நோக்கத்தை அறிந்த அவர் கட்சியார் அவரைப் பெரிதும் ஆதரித்தனர். அதன் பயனாகச் சென்ற ஆண்டில் ஹிட்லர்—முதலில் செங்கல் அறுத்துக்கொண்டிருந்த ஹிட்லர்—

வியன்னு நகரில் வேலையின்றிப் பசியோடலைந்த ஹிட்-லர்—ஜெர்மனியின் முதல் மந்திரியார் ஆனுர்.

பிள்ளைகளே, இத்தகைய உயர் நிலையைப் பெறுவ-தற்கு ஹிட்லரிடம் காணப்படும் உயர் குணம் யாது? உறுதியுடைய மனமே— 'எக்காரியத்திலும் வெற்றி பெறுவோம்!' என்னும் நம்பிக்கை கொண்ட மனமே— அவரது பெருவெற்றிக்குக் காரணமாகும் என்பதை நீங்கள் ஒருபோதும் மறவாதீர்கள்! மறவாதீர்கள்!!

கலங்கா மனமுடைய அப்பெரியார், அன்பு தவ-ழும் முகத்தையுடையார்; மனிதர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சொல்லாற்றல் உடையார். அவர் மேடைமீது பேசும் போது கர்ஜிக்கும் சிங்கத்தைப் போல விளங்குவார்; வேறிடங்களில் சாந்தமே உருக் கொண்ட சாந்த மூர்த்தியாக விளங்குவார். அவர் பிரசங்கம் செய்யும் போது நாட்டு நன்மைக்கு வேண்டும் சீர்திருத்தங்களைப்பற்றி அவரது கலங்கா உள்ளத்தி-னின்று தோன்றி வெளிவரும் நன்மொழிகளைக் கேட்-டுக் காந்தத்தால் இழுக்கப் பெற்ற இரும்பைப்போல மக்கள் அவருக்கு வசமாகின்றுர்கள் என்றுல், அவரது மனவுறுதியின் சக்தியை என்னவென்று புகழ்வது!

மனவுறுதியுடைய அப்பெரியார் அருங்குணங்-கள் வாய்ந்தவர்: பிற ஐரோப்பியரைப் போல அவர் புகை பிடிப்பதில்லை; மதுபானம் உட்கொள்வதில்லை; சுத்தமான காய் கனிகளையே உட்கொள்ளுகின்றுர்; விவாகம் ஆகாதவர். அவர் உலகத்துப் பெண்களைத் தாய்மார்களாகக் கருதுகின்றுர்; அவர்கள் உத்தியோ-கங்களில் அமராமல் வீடுகளில் இருந்தே இல்லறம் என்-

னும் நல்லறத்தை நடத்தவேண்டும் என்பதை விரும்புகின்றார். ஒவ்வொரு பெண்ணும் தன் தாயாரைப்போல அன்பு மாயமானவள் என்பது அவரது எண்ணம். அவர், 'ஒவ்வொரு ஜெர்மானியனும் தொழில் பெற்றுச் சுக வாழ்வு வாழும் வரை எனது மனம் நிம்மதி அடையாது,' என்று கூறி, அதற்கு ஏற்பச் சீர்திருத்தங்களைச் செய்து வருகின்றார். சுருங்கக் கூறின், ஜெர்மனி மற்ற உயர்ந்த நாடுகளைப்போல மேனிலையையும், கல்விச் சிறப்பையும், தனது பழைய பெருமையையும் அடைய வேண்டும் என்பதே ஹிட்லர் கனவிலும் கருதும் எண்ணமாகும்.

அவரது விருப்பமும் படிப்படியாக நிறைவேறிக்கொண்டே வருகின்றது. இன்றைய உலகில் ஹிட்லர் ஓர் அபூர்வ மனிதராக விளங்கி வருகின்றார். உலகமக்கள் அவரையே இமை கொட்டாது கவனித்து வருகின்றார்கள். இவ்வளவு வெற்றிக்கும் காரணம் அவரது கலங்கா உள்ளமே என்பதில் ஐயமுண்டோ ?

---

27. விதைப்பதே விளைவு

1. " நாம் எதனை விதைக்கிறோமோ, அதனையே விளைவாக அனுபவிப்போம்." —ஓர் ஆங்கிலப் பழமொழி
2. "நீ நன்மை செய்தால், நன்மை பெறுவாய்; தீமை செய்தால், தீமை பெறுவாய்." —ஜேம்ஸ் ஆலன்

தம்பி, ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் இவ்வுண்மையை அனுபவித்து வருதல் அனைவரும் அறிந்ததே. நீ நன்மை செய்தால், நன்மை பெறுவாய்;

தீமை செய்தால், தீமையே பெறுவாய். இதில் எள்ளத்தனையும் மாறுதல் இல்லை. ஏன்? எல்லா உயிர்களும் ஆண்டவன் மக்கள். அவற்றுக்கு நன்மை செய்வது, உனக்கு நீயே நன்மை செய்து கொள்வது போலாம். அவற்றுக்குத் தீமை செய்வது, உனக்கு நீயே தீமை செய்துகொள்வது போலாம். ஒவ்வோர் உயிரிடத்திலும் உள்ளொளியாக விளங்குகின்ற ஒப்பிலாத சக்தியே உன்னிடத்திலும் உள்ளொளியாக விளங்கி வருவது. அங்ஙனமிருக்க, நீ ஓர் உயிர்க்குத் தீமை செய்வது உன் சொந்த உயிருக்கே தீமை செய்வதாகும் அன்றோ?

கொலை செய்வோனை அரசாங்கத்தார் சும்மா விட்டு விடுகின்றனரா? இல்லை. அவனைப் பிடித்துக் கொலை செய்யப்பட்ட உயிருக்குப் பதிலாக அவன் உயிரை வாங்கி விடுகின்றனர் அல்லவா?

தம்பி, நீ உன் நண்பனுக்கு ஓர் அரிய உதவிசெய்தாய். சமயம் வாய்க்கும் போது உன் நண்பன் நீ செய்த உதவிக்குப் பதில் உதவி செய்து விடுவான் அல்லவா? இதனை நீ 'இல்லை' என்று மறுக்க முடியுமா? ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் "பதிலுக்குப் பதில்", அதாவது 'வினைப்படே விளைவு' என்பது கலந்தே இருக்கின்றது என்பதை நீ மறவாதே.

'தாவரங்கட்கும் உயிர் உண்டு; அவை நம்மைப் போலவே இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன,' என்னும் உண்மையை உலகறியச்செய்த நம் தாய் நாட்டுச் சகோதரரான சர். ஜகதீச சந்திர போஸ் என்னும் பேரறிஞர் தம் தோட்டத்தில் இரண்டு புஷ்பப் பாத்-

திகளை ஏற்படுத்தியிருந்தார்; அவற்றுள் ஒன்றைப் பாதுகாத்து வந்தவன், கடுகடுத்த முகத் தோற்றம் கொண்டவன். வேறொன்றை அன்று மலர்ந்த தாமரை மலர் போலப் பிரகாசம் பொருந்திய முகத் தோற்ற-முடையவன் கவனித்து வந்தான்.

அவ்விருவரும் தம் வேலையை ஒப்புக்கொண்ட போது இரண்டு பாத்திகளிலும் புஷ்பங்கள் மலர்ந்-திருந்தன. பின்னர், இருவரும் தத்தம் பாத்திக்குத் தினந்தோறும் நீர்விட்டு, அவற்றைப் பாதுகாத்து வந்தனர். கடுகடுத்த முகமுடையவன் வாய் திறவாமல் நீர் ஊற்றி வந்தான். மலர்ந்த முகத்தையுடையவன் எப்போதும் இனிய பாட்டுகளைப் பாடிக்கொண்டே நீர் ஊற்றிக் களை எடுத்துச் செடிகளைக் கண்ணெனப் போற்றி வந்தான். ஒரு மாதத்திற்குப் பின்னர், அவ-னது பாத்தியில் இருந்த புஷ்பச் செடிகள் முன்னை-யிலும் அதிகமான மலர்களைப் பெற்று வளர்ந்து அழகுடன் விளங்கின. ஆனால், கடுகடுத்த முகமுடைய-வனது பாத்தியில் இருந்த செடிகளில் பூக்களே இல்லை.

இதனை யறிந்த சர். ஜகதீச சந்திர போஸ், மீண்-டும் இதைப் பரீட்சை செய்ய விரும்பினார்; கடுகடுத்த-வன் மேற்பார்வையிலிருந்த பாத்தியை மலர்ந்த முக-முடையவன் மேற்பார்வையில் விட்டார்; அவனது பாத்தியைக் கடுகடுத்தவன் பாதுகாவலில் விட்டார்.

சில நாட்கள் கழிந்தன. மலர்ந்த முகமுடையவன் மேற்பார்வையில் முதலில் மலர்ந்துகொண்டிருந்த புஷ்-பச் செடிகள் கடுகடுத்தவன் மேற்பார்வைக்கு வந்த பின்னர் மலர்தலை நிறுத்திவிட்டன. கடுகடுத்தவன்

மேற்பார்வையில் மலராதிருந்த செடிகள் மலர்ந்த முக-முடையவன் மேற்பார்வைக்கு வந்த பின்னர் நன்றாக மலர்ந்து விளங்கின.

தம்பி, இவ்வுதாரணத்தால் நீ தெரிந்து கொள்வ-தென்ன? மலர்ந்த முகமுடையவன் எப்போதும் வெளியுலகில் அன்பைப் பரப்பி வந்தான்; அதன் பய-ஞக, அவன் பாது காவலில் இருந்த செடிகளும் தங்கள் அன்பைக் காட்ட மலர்ந்தன. எப்போதும் கடுகடுத்த முகத்தைக் கொண்டவன் வெளியுலகில் வெறுப்பை-யே பரப்பி வந்தான்; அதன் பயஞக, அவன் பாது-காவலில் இருந்த செடிகளும் மலர்வதை நிறுத்தி-விட்டன. செடிகள் முன்னவனுக்கு அன்பை அளித்-தன. ஏன்? அவன் அன்பை அளித்தான். பின்னவ-னுக்கு வெறுப்பை அளித்தன. ஏன்? அவன் அவற்-றுக்கு வெறுப்பை அளித்தான்.

தம்பி, இவ்வாறே ஒவ்வொரு செயலிலும் நீ விதைப்பதை விளைவாகப் பெறுவாய் என்பதை ஒரு போதும் மறவாதே. நீ அன்பைக் கனியச் செய்வா-யாஞல், உன் உடம்பு முழுவதும் அன்பு மயமாகும்; நீ நடக்கும் வழியெல்லாம் அன்புவழியாகும்; உனது விளைவும் அன்பெனும் இன்பக் கனியாகும். நீ இன்-புற்று வாழ்வாய்.

The Liberty Press, S. T. Madras.